Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | சித்திரை-07 | 20-04-2005 | புதன்கிழமை | ஓசை-61



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-11478)

## அன்னை பூபதி, நாட்டுப்பற்றாளர் நினைவு நிகழ்வுகள் தமிழீழமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு

தியாக தீபம் அன்னை பூபதி அவர்களின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும், தமிழீழ நாட்டுப்பற்றாளர் தினமும் நேற்று தமிழீழமெங்கும் உணர்வுபூர்வமாக மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

காலை 9.00 மணியளவில் பொதுச் சுடரேற்றல், தமிழீழ தேசியக் கொடியேற்றல், அன்னை பூபதி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் வணக்கம், ஈகச்சுடரேற்றல், மலர்மாலை அணிவித்தலுடன் உண்ணா விரத நிகழ்வு ஆரம்பமானது. உண்ணாவிரத நிறைவினைத் தொடர்ந்து மாலை நினைவுரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கிளிநொச்சியில்

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கிளிநொச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் நேசன் தலை மையில் அன்னை பூபதி அவர்களின் நினைவு நிகழ்வு இடம்பெற்றன.

மேலும் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் மரநடுகை நிகழ்வும் இடம் பெற்றது.

கிளிநொச்சி தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்தில் தமிழீழக் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் பா. இயலரசன் தலைமையில் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

பரந்தன் பகுதியில் அன்னையின் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன. அடையாள உண்ணாவிரதத்துடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# பொதுக்கட்டமைப்பு அமுல் செய்யப்படின் நம்பிக்கையுடன் பேச்சை முன்னெடுக்கலாம்!

## எரிக்குடனான சந்திப்பில் கேணல் பானு வலியுறுத்து



(மட்டக்களப்பு)

**சுனாமி மீள்கட்டுமானத்திற்கான இணைந்த பொதுக் கட்டமைப்பு அமுல்படுத்தப்பட்டால் நாம் நம்பிக்கையுடன் பேச்சுக்களை முன்னெடுக்க முடியும் . பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவுவதற்கு இணைந்த கட்டமைப்பின் அவசியம் குறித்து நோர்வேத் தரப்பிற்கு நாம் விளக்கியுள்ளோம் என மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட கட்ட ளைத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.**

நேற்று நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்மை சந்தித்தபின் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பில் மட்டு.அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், மட்டு.அம்பாறை தளபதி ராம், மாவடி முன்மாரி கோட்டத்தளபதி ரமணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது வெலிக்கந்த இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கருணா குழு என்ற பெயரில் முகாம் இருப்பது பற்றியும் இதற்கும், இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கும் தொடர்பு இருப்பது குறித்தும் விடுதலைப்புலிகள் விளக்கிக் கூறியுள்ளனர். இதேவேளை அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சு.ப.தமிழ்ச்செல்வன் - எரிக் இன்று கொழும்பில் சந்திப்பு

### -பிற்பகல் கிளிநொச்சி வருகை

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் இன்று கிளிநொச்சி வருகை தருகிறார். ஐரோப்பிய நாடுகளுக்கான அரசியல் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் இன்று காலை 7.30 மணிக்கு கொழும்பை வந்தடைந்து நோர்வேயின் விசேடதூதுவர் எரிக்சூல்ஹெய்ம் அவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் பிற்பகல் 1.30 மணியளவில் விசேட உலங்குவானூர்தியில் கிளிநொச்சியை வந்தடைவார்கள்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவில் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அரசியல்துறை மகளிர் துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி மற்றும் ஜோர்ஜ் ஆகியோரும் கூடவே கிளிநொச்சியை வந்தடைவர்.

## புதிய பாப்பரசர் தெரிவானார்



புதிய பாப்பரசராக ஜோசப் ரெட்சிங்கர் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவர். பாப்பரசரின் மரபுவழிப் பெயராக பதினாறாவது பெனடிற் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மேலதிக விபரங்கள் உள்ளே.

## நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் கிழக்கில் முத்தரப்புக்களுடன் சந்திப்பு

### -கிழக்கின் நிலைமைகள் குறித்துக் கவலை

(மட்டக்களப்பு)

நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் மேற் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களையும் சிறிலங்காப் படைத்தரப்பினர் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார். மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அவர் முதலில் சிறிலங்காவின் 233 ஆவது படையணி அதிகாரிகளைச் சந்தித்து மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்துப் பேச்சு நடத்தினார்.

பின்னர் அவர் மிதக்கும் பாலத்தின் ஊடாக கொக்கட்டிச்சோலைக்கு சென்று அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு மற்றும் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் ஆகியோருடன் கலந்துரையாடினார். இதேவேளை அங்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய நிலவரங்கள் குறித்து றொக்கா இன்று ஆராய்வு

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான பிரதி இராஜாங்க செயலர் கிறிஸ்டினா றொக்கா இன்று முக்கிய சந்திப்புக்களை நடத்தவுள்ளார். நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம்,சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார். முன்னதாக நேற்றுக் கல்முனையில் அமெரிக்க உதவியுடன் மேற்கொள்ளப்படும் உதவித் திட்டங்களைப் பார்வையிட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

### வட கிழக்கு மாகாண

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் பத்து மாதங்களுக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் எதிர்வரும் 10 மாதகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதற்கான அறிவித்தலைத் தேர்தல் ஆணையாளர் நேற்று வெளியிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் தற்போதைய நிலவரமானது சுதந்திரமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு ஏற்புடையதல்ல என்ற அடிப்படையிலேயே இந்த ஒத்திவைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் எதிர்வரும் வியாழக்கிழமை இந்தத் தேர்தல்கள் நடத்தப்படவிருந்தன

எனினும் அது எதிர்வரும் 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை பூபதி நினைவு நிகழ்வில்...

யாழ்ப்பாணத்தில....





கிளிநொச்சியில்....





படங்கள்:-
சசிக்குமார்,ஆன்சிலின்


## சாவு அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம்
### (பழைய செஞ்சோலை உழவியந்திர சாரதி)

வாதரவத்தை புத்தூரைப் பிறப்பிடமாகவும், 12 ஆம் கட்டை விசுவமடுவை தற்காலிக வசிப்பிடமாவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம் 19.04.2005 நேற்றுக் காலை காலமானார்.காலம்சென்ற ஞானத்தின் அன்புக் கணவரும் விஜயகுமார், இலச்சனகுமார், வசந்துகுமார், ரேணுகாதேவி, விக்கினேஸ்வரகுமார்,சசிகலாதேவி,ரவீந்திரகுமார். ஆகியோரின் அன்புத் தந்தையுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20.04.2005 காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விசுவமடு பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள் ,நண்பர்கள்அனைவரும் ஏற்றுக் கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
விஜயன்.
(மருமகன்)

(6064)

## வரிவிளம்பரம்

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்- சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), .
(சி.11779)

### 2007 A/L கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி, சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசயானவியல் - புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்.சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம்.நேசன்) இடம்:- கேம்பிறிச் கல்லூரி, கிளிநொச்சி. (நிர்வாகம்) (சி.11780)

### சிங்கள வகுப்புக்கள்

புதியபிரிவுகள் ஆரம்பம் பிரிவு I- சனி,ஞாயிறு நாட்களிலும், பிரிவு II- செவ்வாய்,வியாழன் நாட்களிலும், வகுப்புக்கள் நடைபெறும். பதிவு மற்றும் சகல விபரங்களுக்கும் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும். நிலவு கணினித் தொழில்நுட்பம், கச்சேரிஅருகாமை,கிளிநொச்சி. (6060)

### விற்பனைக்கு உண்டு

புத்தம் புதிய ஆறுபேர் பயணம் செய்யக் கூடிய அல்லது 500 கிலோ கிராம் எடை இழுக்கக் கூடிய முச்சக்கர வண்டி (ஆட்டோ) விற்பனைக்குண்டு இனம்-Titus தொடர்பு .ச.கனகரத்தினம்,2ஆம் வட்டாரம்,முள்ளியவளை. (5832)

## சாரதி பதவிக்கான விண்ணப்பம் கோரல்

### எச்.வி.எஸ் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் திருமுறிகண்டி, கிளிநொச்சி

பதவி :- ரிப்பர், உ .இயந்திர சாரதிகள்
வயதெல்லை :- 21-55வரை
தகைமைகள் :- எட்டாம் வகுப்பு
01வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
சம்பளம் :-நேரில்பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டுள் ளோர் தகைமைச் சான்றிதழ்களுடன் திருமுறிகண்டியில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு எதிர்வரும் 28.04.2005,29.04.2005,30.04.2005 ஆகிய நாட்களில் அலுவலகக் கடமை நேரத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
எச். வி. எஸ் வரையறுக்கப்பட்ட (தனியார் ) நிறுவனம்
A-9 வீதி,திருமுறிகண்டி,
கிளிநொச்சி.

(6063)

## BOC இலங்கைவங்கி-முக்கியஅறிவித்தல்

ලංකා බැංකුව இலங்கை வங்கி

எமதுயாழ்.மேற்றரக்கிளை,யாழ்.இரண்டாம்கிளை,மற்றும் திருநெல்வேலிக்கிளை வாடிக்கையாளருக்கு விரைவான வங்கிச்சேவையை வழங்குவதற்கான புதிய கணினிமுறை ஒன்றினைஅறிமுகம்செய்ய இருப்பதால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் கீழ்க் குறிப் பிடப்பட்ட அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

01. எதிர்வரும் சனிக்கிழமை (23.04.2005) அன்று வங்கி திறக்கப்படமாட்டாது.

02. தன்னியக்கப்பணம் வழங்கும் இயந்திரம் (ATM) 21-04-2005 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியில் இருந்து 25.04.2005 திங்கட் கிழமை மு.ப.8.00 மணிவரை மூடப்பட்டிருக்கும்.

03. 21.04.2005 வியாழக்கிழமை காலை 11.00 மணிவரை மட்டுமே வங்கி திறக்கப்பட்டிருக்கும்.

உதவிப்பொதுமுகாமையாளர்,
இலங்கைவங்கி,
வடபிராந்திய அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி.11726)

# நேற்று புதிய போப்பாண்டவர் தெரிவானார்!

# மகிழ்ச்சி வெள்ளத்தில் கிறிஸ்தவர்கள்!!

(வத்திக்கான்)

**உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த உலக கிறிஸ்தவர்களின் தலைவர் புதிய போப்பாண்டவர் தேர்வு வத்திக்கான் சிஸ்ரின் தேவாலயத்தில் நேற்று இரவு சரியாக தமிழீழ நேரம் 9.32 இற்கு நிறைவுற்று புதிய போப்பாண்டவராக ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த யோசெப் ரட்சிங்கர் (வயது-78) தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் புதிய போப்பாண்டவரின் மரபுவழிப் பெயராக பதினாறாவது பெனடிற் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவர் 265 ஆவது போப்பாண்டவராவார்.**



தமது புதிய தலைவரை அறிந்து கொண்ட உலக கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து தமது சந்தோசத்தை வெளிப்படுத்தினர்.

அண்மையில் நித்திய இளைப்பாற்றையடைந்த போப்பாண்டவர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரிற்குப் பின் புதிய போப்பாண்டவரைத் தெரிவு செய்வதற்கான முதல் கட்டத் தெரிவு நடவடிக்கை வத்திக்கான் சிஸ்ரின் தேவாலயத்தின் பிரத்தியேக அறையொன்றில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அன்றைய தேர்வில் எந்த இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை என்பதற்கு அறிகுறியாக தேவாலயத்தில் மேற்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த புகை கூண்டின் ஊடக கரும்புகை வெளிவந்தது. இதனையடுத்து அடுத்த கட்டத் தெரிவு வேலைகள் நேற்றுப் பிற்பகல் தொடங்கி மிகவும் இரகசியமான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. போப்பாண்டவர் தெரிவை பல இலட்சக்கணக்கான மக்கள் தேவாலயத்தின் வெளியே சென் பீற்றர்ஸ் சதுக்கத்தில் நின்று முடிவை எதிர்பார்த்து ஆவலுடன் காத்துநிற்க சரியாக தமிழீழ நேரம் ஒன்பது முப்பத்திரண்டிற்கு போப்பாண்டவர் தெரிவு செய்யப்பட்டதற்கு அறிகுறியாக புகைக்கூண்டிலிருந்து வெண்புகை வெளிவந்தது. சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின் வெளியே கூடியிருந்த மக்கள் கரகோசம்செய்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். சம நேரத்தில் தேவாலய மணியும் ஒலித்தது. இது புதிய போப்பாண்டவர் தெரிவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்தியது.

இரவு 10.20 இங்கு புதிய போப்பாண்டவர் மக்கள் முன் தோன்றி தான் தெரிவு செய்யப்பட்டதை உத்தியோக பூர்வமாக அறிவித்து மக்களை நோக்கிக் கையசைத்தார். தமது புதிய தலைவரைக் கண்ட உலக கிறிஸ்வ மக்கள் மகிழ்ச்சி பொங்க கரகோசம் செய்து புதிய போப்பாண்டவரை வாழ்த்தினர்.

இவர் கடந்த 24 வருடங்களாகத் தேவாலயத்தின் முக்கிய பொறுப்பு வாய்ந்த கர்தினால் ஆக இருந்துள்ளார். இந்த நூற்றாண்டில் தெரிவு செய்யப்பட்ட ஆகக்கூடிய வயதுடைய போப்பாண்டவர் இவர் என்பது குறிப்பித்தக்கது.







## சீனா மன்னிப்புக் கேட்க வேண்டும்-ஜப்பான்
## மன்னிப்புக் கேட்பதற்கு எதுவும் இல்லை-சீனா

(டோக்கியோ)

ஜப்பானுக்கு எதிராக கடந்த மூன்று வாரங்களாக சீனாவில் நடந்த வன்முறைச் சம்பவங்களுக்கு சீனா மன்னிப்புக் கேட்க வேண்டும். என்று ஜப்பான் வலியுறுத்தியது ஆனால் மன்னிப்புக் கேட்க சீனா மறுத்து விட்டது.ஜப்பானின் வரலாற்றுப் பாடப்புத்தகத்தில் சீனாவின் மீது ஆக்கி மிப்புச் செய்து சீனர்களை சித்திரவதை செய்ததை மூடி மறைத்து நியாயப்படுத்தும் தொனியில் எழுதப்பட்டு இருந்தது. இதைத் தொடர்ந்து சீனாவில் பத்து நகரங் களில் ஜப்பானுக்கு எதிராக வன்முறைச் சம்பவங்கள் நடந்தன.

இதனால் இரு நாடுகளுக்கு இடையேயான உறவு மேலும் சீர்குலையாமல் தடுப்பதற்காக ஜப்பான் வெளிநாட்டு அமைச்சர் மச்சிமுரா சீனா சென்றார். அங்கு அவர் சீன வெளிநாட்டு அமைச்சர் லிஜாவோஷிங்கைச் சந்தித்துப் பேசினார். அப்போது சீனாவில் நடந்த வன்முறைச் சம்பவங்களுக்கு சீன அமைச்சர் வருத்தம் தெரிவிக்க வில்லை. "மன்னிப்புக் கேட்பதற்கு ஏதும் இல்லை" என்று ஜப்பான் அமைச் சரிடம் சீன அமைச்சர் கூறிவிட்டார்.

## இங்கிலாந்தின் பொதுத்தேர்தலில் தொழிலாளர் கட்சிக்கு வாக்குவீதம் சரிவு

### 'டெய்லிடெலிகிராப'' கருத்துக்கணிப்பு

(லண்டன்)



டொனி பிளேயர்

இங்கிலாந்தில் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் டொனி பிளேயர் சார்ந்துள்ள தொழிலாளர் கட்சிக்கான வாக்குச் சதவீதம் குறைவடைந்துள்ளதாக கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

இங்கிலாந்தில் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் கட்சியினருக்குள்ள செல்வாக்குக் குறித்து 'டெய்லிடெலிகிராப்' பத்திரிகை கருத்துக்கணிப்பு நடத்தி வருகிறது. இப்பத்திரிகைக்காக யூகோவ் அமைப்பு நடத்திய ஆய்வில் இரண்டு ஆயிரத்து 11 பேர் தேர்வு செய்யப்பட்டு ஏப்ரல் 15முதல் 17ஆம் திகதி வரை அவர்களிடம் ஆய்வு நடந்தது. இதில் பிரதமர் டொனிபிளேயர் சார்ந்துள்ள தொழிலாளர் கட்சிக்கு செல்வாக்குக் குறைந்துள்ளது.

கடந்த வாரத்தைவிட இரண்டு சதவீதம் இக்கட்சிக்கு செல்வாக்குக் குறைந்துள்ளது மைக்கேல் ஹோா வண்ட் சார்ந்துள்ள பழமைவாதக் கட்சிக்கான வாக்கு 33 சதவீதமாக தொடர்ந்து நீடிக்கிறது சனநாயக விடுதலைக் கட்சிக்கான ஆதரவு ஒரு சதவீதம் உயர்ந்து 23 சதவீதத்தை எட்டியுள்ளது டொனி பிளேயர் மூனறாவது முறையாக பிரதமராகத் தேர்வு பெறுவதில் எந்தச் சிக்கலும் இருக்காது என்பது கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது. வாக்கு வித்தியாசம் ஒன்று முதல் பத்து சதவீதம் வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சதாம்குசைனுக்கு மரண தண்டனை விதிக்க அனுமதி தரமாட்டேன்- ஜலால்தலாபாணி

(பாக்தாத்)

ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் குசைனுக்கு மரண தண்டனை விதித்தால் அதற்கு அனுமதி தரமாட்டேன் எனவும் அதற்கான உத்தரவுப்பத்திரத்தில் கையெழுத் திடமாட்டேன் என்றும் ஈராக்கின் புதிய சனாதிபதி ஜலால்தலாபாணி தெரிவித்துள்ளார். ஈராக் அதிபர் பதவி என்பது மூன்று பேர்களைக் கொண்டது. நான் இல்லாமல் இரண்டு துணை சனாதிபதிகள் இருக்கி றார்கள். எனவே எந்த முடிவாக இருந்தாலும் இந்த மூன்று பேரும் சேர்ந்துதான் எடுக்க வேண்டும். எனவே ஏனைய இரண்டு பேரும் முடிவு செய்யட்டும் என்று நினைத்து நான் விடுமுறையில் சென்று விடுவேன் என்று தலாபாணி கூறினார்.

புதிய தலைமையின் அனைத்து உறுப்பினர்களும், பெரும்பான்மை யான ஈராக்கியர்களும் சதாம் குசைனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று விரும்பு கிறார்கள். நான் மட்டுமே மாறுபட்ட கருத்துக் கொண்டவனாக இருக்கி றேன் என்று தலாபாணி கூறினார்.



பாக்தாத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகரான இராணுவ மேஜர் அட்னன் மிடிஷ் கரகோஷயின் உடலைத் தூக்கிச் செல்லும் உறவினர்கள்.

## 100 பேர் கைது

(டாக்கா)

கிறீஸ் நாட்டிற்குள் சட்டவிரோத மாகக் குடியேற முற்பட்ட நூறுபேரை கிறீஸ் கடற் படையினர் கைது செய்துள்ளனர். படகு ஒன்றில் இவர் கள் சென்று கொண்டிருந்தபோதே கடற்படையினர் இவர்களைக் கைது செய்தனர்.பங்களாதேசத்தில் இருந்து வேலைதேடி இளைஞர்கள் படகுகளில் வெளிநாடுகளுக்குச் செல்ல முயன்று வருகிறார்கள்.



டாக்காவில் ஒன்பது மாடிக்கட்டடம் ஒன்று நேற்று இடிந்து விழுந்ததில் பாதிக்கப்பட்டவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்ட மீட்புப் பணியாளர்களும், இராணுவத்தினரும் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் நிற்கின்றனர்.

# அன்னை பூபதியின் வரலாற்றை சித்தரிக்கும் சிந்துநடைக் கூத்து

(புதுக்குடியிருப்பு)

**முல்லை. மாவட்ட அரசியல் துறையினரின் அனுசரணையுடன் முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினரால் அன்னைபூபதி அவர்களின் 17 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் வரலாற்றைச் சித்தரிக்கும் சிந்து நடைக் கூத்துப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம் பெற்றது.**



முதலாமிடத்தைப் பெற்ற சிந்து நடைக் கூத்தின் காட்சி ஒன்றை முதலாவது படத்திலும் இதற்கான பரிசில் அரசியல் துறை நிதிப் பொறுப்பாளர் ஆதவனால் கலைஞர் ஒருவரிடம் வழங்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம் (படங்கள்:தவரட்ணம்)

இவ் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரை நுண்கலைக் கல்லூரிகளின் பணிப்பாளர் கண்ணதாசன் ஏற்றிவைக்க, தியாகி அன்னை பூபதியின் உருவப்படத்துக்கான ஈகச்சுடரை அரிகான் பொய்கை செல்லத்துரை ஏற்ற, மலர் மாலையை கிராம அலுவலர் சிவராசா அணிவித்தார்.

தொடர்ந்து வரவேற்பு நடனம் இடம் பெற்றது. இதனையடுத்து நினைவுரையை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஆற்றினார். தொடர்ந்து சிந்து நடை நாட்டுக்கூத்து இடம்பெற்றது. இதனிடையே நெறியாளர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஏற்பாட்டில் அன்னை பூபதி நினைவு தினத்தை முன்னிட்டு உடையார்கட்டு மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் சிரமதானப் பணிமேற்கொள்ளப்பட்டது.

இச்சிரமதானப் பணியானது கடந்த 16,17,18 ஆகிய தினங்களில் மேற்கொள்ளப்பட்டது.

இதனைப் பாடசாலையின் பழைய மாணவர்கள், பொது அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள், பெற்றோர் இணைந்து மேற்கொண்டனர். (08,19)

# ஜி.ரீ.இசற் நிறுவனத்தின் நிதி உதவியுடன் உப்பளத்தில் 80 பேர் தங்கும் விடுதி அமைப்பு

(விசுவமடு)

ஜீரீ-சற் நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில் தங்கியிருந்து உப்பள வேலை செய்யும் பெண் பணியாளர் 80 பேர் தங்கக்கூடிய விடுதிகள் அமைக்கப்பட்டு-இவர்களுக்கான பொதுமண்டபம், சமையற் கூடம் என்பனவற்றை அமைப்பதற்கான நிதியினை ஜீரீசற் நிறுவனம் பொருண்மிய மதியுரையகத்திற்கு வழங்கியுள்ளது. இந்நிதியை பெற்று பொருண்மிய மதியுரையகம் கட்டடங்கள் அமைக்கும் வேலைகளை முன்னெடுத்து வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 80 பெண் உப்பளப் பணியாளர்கள் நன்மையடையவுள்ளனர். 80 பெண் பணியாளர்களும் உப்பளத்தில் பணிபுரிவதற்காக பலமைல் தூரம் போக்கு வரவு மேற்கொண்டு பல சிரமங்களை எதிர்கொண்டு வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (46)

# கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பிரச்சினை ஆராய்வுக் கலந்துரையாடல் எதிர் வரும் 25 ஆம் திகதி கிளிநொச்சி நிர்வாக சேவை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி விக்ரமன் தலைமையில் பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர். (சோ)

# சுண்டிக்குளம் பகுதியில் பறவைகள் சரணாலயம் மட்டுமே அமைக்க முடியும்

## -கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(விசுவமடு)

கிளிநொச்சி சுண்டிக்குளம் பகுதியில் பறவைகள் சரணாலயம் அமைக்க முடியுமே தவிர வன விலங்குகளுக்கான சரணாலயம் மற்றும் மிருகக் காட்சிச்சாலை அமைக்கக் கூடிய சூழல் இல்லையென கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சுண்டிக்குளம் பகுதியில் பறவைகளுக்கான சரணாலயம் பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் இலங்கையில் இருந்த போதே அப்போதைய சூழலியலாளர்களால்- சூழலின் தன்மைக்கேற்ப அமைக்கப்பட்டது. மிருகங்கள் சரணாலயம் அமைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் அங்கே குறைவாகவே காணப் படுகிறது. அதிலும் வெளிநாட்டில் இருந்தும்- இலங்கை பேராதனை மற்றும் யாழ். பல்கலைக் கழகங்களில் இருந்தும் அண்மையில் பேராசிரியர்கள் சுண்டிக்குளம் பகுதிக்கு வருகைதந்து ஆய்வுகளை மேற் கொண்டதாக பத்திரிகை வாயிலாக அறிந்துள்ளதாகவும் அப்படி விலங்குகளுகான சரணாலயம் அமைக்கக் கூடிய சாத்தியம் இருந்தால் அவர்களின் அறிக்கை கிடைத்த பின்னர் ஏற்ற நடவடிக்கை மேற் கொள்ளலாமென அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (46)

# மிளகாய் பயிர்ச் செய்கை பாதிப்பு விவசாயிகள் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை காரணமாக மிளகாய் செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை குறைந்த அளவே உபஉணவுப் பயிற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. .இதில் மிளகாய்ச் செய்கை மிகக்குறைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. மிளகாய்க்கான சந்தைவாய்ப்பு இன்மையே இதற்குக் காரணம் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். உற்பத்திச்செலவு அதிகரித்துள்ளதால் உற்பத்தி மேற்கொண்டு இங்கு சந்தைப்படுத்தமுடியாத நிலையில உற்பத்தியாளர்கள் மிளகாய் உற்பத்தியில் ஆர்வம் காட்டவில்லை- எனத் தெரியவருகிறது. இருந்த போதிலும் உற்பத்தி மேற்கொண்டுவரும் விவசாயிகள் மிளகாய்ச்செய்கையில் மழை காரணமாக பழம்பறிக்க முடியாத நிலையும், பிடுங்கிய பழங்களை காயவிட முடியாமலும் பெருமளவில் அழுகிப்போன நிலையில் நஷ்டமடைந்துள்ளனா. குறிப்பாக பூநகரிப் பிரதேச விவசாயிகள் இதன் காரணமாக பெருமளவு பாதிப்படைந்துள்ளனர் என பூநகரி உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (46)

# விட்டமின் "ஏ" மாத்திரைகள் வழங்குவதற்கு ஏற்பாடு

(அலுவலக செய்தியார்)

ஆறுமாதம் தொடக்கம் ஐந்து வயது வரையிலான சிறுவர்கள் அனைவருக்கும் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் விட்டமின் (ஏ) மாத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை தங்கள் வதிவிடங்களுக்கு அருகாமையிலுள்ள சிகிச்சை நிலையங்களில் வைத்து மேற்படி சிறுவர்களுக்கு விட்டமின் (ஏ) வழங்கப்படவுள்ளது.

எனவே தங்கள் குழந்தையின் வளர்ச்சிப் பதிவேட்டுடன் அன்றைய தினம் சிகிச்சை நிலையத்திற்கு சமுகமளித்து விட்டமின் (ஏ) யினைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.சுஜந்தன் அவர்கள் வேண்டியுள்ளார். (சோ)

# முதலாமிடம் பெற்றார்

(அலுவலக செய்தியாளர்)



2004 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றி கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவன் சிறந்த பெறுபேற்றைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். 9ஏ,பி. புள்ளிகளைப் பெற்று செல்வன் பஞ்சாட்சரம் கோகிலன் என்ற மாணவனே முதலாமிடம் பெற்றவராவார். (சோ).

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் செம்மலைக் கிராமத்தில் தையல் பயிற்சி ஆரம்பம்

(முல்லைத்தீவு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன், நிகொட் நிறு வனத்தின் அனுசரணையுடன்,தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் தையல் பயிற்சி செம்மலைக் கிராமத்தில் கடந்த நான்காம் திகதி மாலை 4.00 மணிக்கு செம்மலை தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்தில் கிராம இணைப்பாளர் சி.சிவநாதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை செம்மலைக் கிராம அலுவலர் வ.புஸ்பராசா, கிராம புனரமைப்புத் தலைவர் மா.அபிமன்னகுமார், செம்மலை கிராம மாதர் சங்கத்தலைவி ம.கிருதராதேவி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் அளம்பில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் த.அரவிந்தன் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து கருத்துரைகளை நிகொட் நிறுவன மாவட்ட சமுதாய அபிவிருத்தி இணைப்பாளர் வி.நவநீதன், கிராம அலுவலர் வ.புஸ்பராசா, தமிழர் புனர்வாழ்வுக கழக பயிற்சித்திட்ட இணைப்பாளர் விமல், கிராம புனரமைப்புக் குழுத்



தலைவர் மா.அபிமன்னகுமார் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து தையல் பயிற்சி பெறுகின்ற பயனாளிகளுக்கான கற்றல் உபகரணங்கள் பயிற்சி ஆசிரியரால் வழங்கப்பட்டன. (20)

# புதுக்குடியிருப்பு நகருக்கு அண்மையாக கழிவுகள் கொட்டப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு!

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு- கேப்பாப்பிலவு ஊடான முள்ளியவளை வீதியில் புதுக்குடியிருப்பு நகருக்கு மிகவும் அண்டிய பகுதியில் வீதி ஓரங்களில்




கடந்த பல ஆண்டுகளாக கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றது.

இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதுடன் வீதியிலும் தகரத் துண்டுகள், ஆணிகள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறான பொருட்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. (08)

# நிரந்தரமான சமாதானத்தின் மூலமே முழுமையான அபிவிருத்தி கிட்டும்

## -நோர்வேத்தூதரக சிரேஷ்ட அதிகாரி ரோ குபேரட்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் நிரந்தர சமாதானமொன்றைக் கட்டியெழுப்புவதன் மூலமே எதிர்வரும் காலங்களில் முழுமையான அபிவிருத்தியை அடையமுடியும் .அவ்வாறானதோர் நிலையினை அடைவதற்காக நோர்வே தன்னாலான முயற்சிகளையும் , உதவிகளையும் வழங்கி வருகின்றது என இலங்கைக்கான நோர்வேத் தூதுவராலயத்தின் சிரேஷ்ட அதிகாரி ரோகுபேரட் தெரிவித்துள்ளார்.**

நோர்வே அரசின் நிதியுதவியின் கீழ் யாழ் .மாநகரசபையுடன் இணைந்து கட்டிமுடிக்கப்பட்ட சுற்றுச்சூழல் முகாமைத்துவப் பிரிவினை நேற்று முன்தினம் திறந்து வைத்த பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கும், நோர்வேயிற்குமான உறவு நீண்டகாலத் தொடர்புகளைக் கொண்டது நோர்வேயின் முதலாவது உதவித்திட்டம் யாழ்ப்பாணத்திலேயே அமுல்படுத்தப்பட்டது. அது மீன்பிடித் தொழிலுக்கான உதவிகளாக இருந்தது புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட மாதத்திலிருந்து எமது உதவிகள் யாழில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக இலங்கையில் அனைத்துப் பாகங்களிலும் நோர்வேயினால் உதவித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது யாழ்.குடாநாட்டில் கால்வாய்கள் புனரமைப்பு, சுற்றுச்சூழல் பராமரிப்புத் திட்டம்,மழைநீரசேகரிப்பு என மூன்று வகை அபிவிருத்தித் திட்டங்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றதெனத் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற கோட்டை இராணுவ முகாமை அண்டிய பிரதேசங்களிலான அனர்த்தங்களை அடுத்து அழிவுற்ற யாழ்.மாநகரசபை வளவிலே இப்பணிமனை நிறுவப்பட்டுள்ளது. யாழ்.கண்டி வீதியோரமாக பண்ணைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இவ் அலுவலகத் திறப்புவிழாவிற்கு யாழ். மாநகரசபை ஆணையாளர் க.குணராசா தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக நோர்வேத் தூதுவராலயத்தைச் சேர்ந்த ரோகுபேரட், எல். விஜயதாசன், யாழ். அரசஅதிபர் கே.கணேஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். முன்னதாக காலை யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்த நோர்வேத் தூதுவராலய பிரதிநிதிகள் யாழ். அரசஅதிபரை அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினர். (27,33)

# மோசமாக சேதமடைந்துள்ள கைதடி-கோப்பாய்ப் பாலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய்-கைதடி பிரதான வீதியில் உள்ள கோப்பாய்ப் பாலம் மிகமோசமாகச் சேதமடைந்திருப்பதால் இவ்வீதியூடான போக்குவரத்து எந்நேரமும் தடைப்படக்கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது.

யாழ்.இல் கடந்த 1995 இல் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது முற்றாக தகர்க்கப்பட்ட இப்பாலம் தற்போது தற்காலிகமாகச் சீர்செய்யப்பட்டு அதனூடாகப் போக்குவரத்து இடம்பெறுகிறது.

இந்நிலையில் யழ்ப்பாணம்-கண்டி வீதியிலுள்ள நாவற்குழிப் பாலம் தற்பொழுது புனரமைக்கப்பட்டு வருவதால் கண்டிவீதிப் போக்குவரத்தை யாழ்ப்பாணத்துடன் இணைக்கும் பிரதான போக்குவரத்து மார்க்கமாக இப்பாலமூடான போக்குவரத்து காணப்படுகின்றது.

இதனால் தற்காலிகமாக சீர் செய்யப்பட்ட இப்பாலம் அதிகரித்த கனரக வாகனப் போக்குவரத்துக்களாலும் கன மழையாலும் கடுமையாகச் சேதமடைந்து உடைந்து கடலுக்குள் வீழ்ந்து விடக்கூடிய நிலையில் உள்ளது.

இதனால் இவ்வீதியூடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டுப் போகும் அபாயம் உள்ளது. (33)

# கனடா செஞ்சிலுவைச் சங்கம் சுனாமியால் பாதித்தோருக்கு உதவி

சுனாமியால் பாதித்துள்ள வடமராட்சி, வடமராட்சிக் கிழக்குப் பகுதி மக்களுக்கு வழங்குவதற்காக கனடா செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கு சுகாதாரப் பொதிகளை வழங்கியுள்ளது. சுனாமியால் பாதிப்பைச் சந்தித்துள்ள இப் பிரதேசத்தைச் சேர்ந்த ஏழாயிரம் குடும்பங்களுக்கு தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு சுகாதாரப் பொதிகளை வழங்க முடிவு செய்யப்பட்டு இருப்பதாகவும் பொதிகளை வழங்கும் பணிகளை செஞ்சிலுவைச் சங்க நிர்வாகிகள் தொடங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## மது போதையில் வந்த குழு உணவகத்தில் அட்டகாசம்

சாவகச்சேரி நகரத்தில் நேற்று முன்தினம் இரவு மதுபோதையில் வந்த குழுவினால் உணவகம் ஒன்று அடித்து நொருக்கப்பட்டுள்ளது. இக் குழுவுக்கு விரோதமான ஒருவர் அந்த உணவகத்தில் இரவு உணவை உண்ட சமயமே அங்கு வந்த குழு ஒன்று இச்சம்பவத்தில் ஈடுபட்டு இருப்பதாகவும் இத் தாக்குதலில் உணவகத்தில் இருந்த பொருட்கள் அடித்து உடைக்கப்பட்டதுடன் உணவுகளையும் தூக்கி எறிந்து இக் குழு அட்டகாசம் புரிந்திருப்பதாகவும் தெரியவருகிறது. (28)

# இந்தியப்படையின் கொடுமைகளை உலகறியச் செய்தவர் அன்னைபூபதி

## –நினைவு நிகழ்வில் சாவகச்சேரி தே.எ.பேரவை செயலர் உரை

(தென்மராட்சி)

இந்தியப் படைகள் எமது மக்கள் மீது புரிந்த அக்கிரமங்களை அநியாயங்களை, கொலைகளை, பாலியல் வன்முறைகளை தனது பூரணமான தியாகத்தின் மூலம் உலகுக்கு அம்பலப்படுத்தியவர் தியாகி அன்னை பூபதி. அந்த மகத்தான தியாகமே இன்று சுடர்விட்டு விடுதலையின் வாசலில் பெரும் விருட்சமாக எழுந்திருக்கிறதென சாவகச்சேரி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பேணாட் தெரிவித்துள்ளார்.

தியாகி அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வின் இறுதி இரண்டாம் நாள் நிகழ்வு சாவகச்சேரியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

58 அகவையில் ஒரு தாயானவளின் அற்புத தியாகத்தை இன்று உலகமே மெச்சுகின்றது. எமது தலைவரின் சேனையிலே இவரின் தியாகமும் விலை மதிக்க முடியாத கருப்பொருளாக இன்று மாறியுள்ளது. இந்த அற்புத தாயின் தியாகத்தையே இன்று மறக்கமுடியாத ஒரு நினைவு நாளாக நினைவு கூருகின்றோம். அந்தத்தாய் கண்ட கனவு எமது தலைவரின் காலத்திலே விரைவில் நனவாகும். விடுதலை பெற்ற தேசமாக மலரும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (28)

## 200 பவுண் நகை, பணம் துணிகரக் கொள்ளை

யாழ்ப்பாணத்தில் பிரபல புடவை நிலையம் ஒன்றின் உரிமையாளர் வீட்டிலிருந்து இருநூறு பவுண் தங்க நகைகள் மற்றும் பல லட்சம் ரூபா பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை கொட்டக்காடு என்னும் இடத்தைச் சேர்ந்த புடவைக்கடை உரிமையாளர் வீட்டின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் இக் கைவரிசையை காட்டியுள்ளனர். புதுவருடத்திற்கு அடுத்த நாள் வீட்டில் யாரும் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி காலையிலேயே இத்துணிகரத் திருட்டு நடைபெற்று இருப்பதாகவும் தெரியவருகிறது. பட்டப்பகலில் நடை பெற்றுள்ள இச்சம்பவத்தில் அப்பகுதி பொது மக்கள் அச்சத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# வெடிபொருட்களின் நச்சுத்தன்மையால் தென்னையின் காய்க்கும் திறன் குறைவு

## விவசாயிகள் கவலை தெரிவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் ஏவப்பட்ட பெருமளவு எறிகணைகளால் ஏற்பட்ட நச்சுத் தன்மைகளால் தென்னை மரங்கள் காய்க்கும் திறன் குறைந்திருப்பதுடன், இளம் கன்றுகளும் அதன் வட்டுகள் சுருங்கி, காய்க்கும் தன்மையை இழந்திருப்பதாகவும் தென்னந்தோட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சிறிலங்காப் படையினரால் வகை தொகையின்றி ஏவப்பட்ட எறிகணைகளால் இப்பிரதேச வளமான தென்னைமரங்கள் முற்றிலும் அழிந்திருப்பதுடன், கந்தக நச்சுத்தன்மைகளால் பெரும்பான்மையான மரங்கள் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். (28)

# இந்து ஆலயத்தின் அரசமரத்தடியில் படையினரின் புத்தர்கோயில்!

## –உடனடியாக அகற்றுமாறு பொது மக்கள் கோரிக்கை

(தென்மராட்சி)

கைதடி-நாவற்குழி இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பிரசித்தி பெற்ற இந்து ஆலயத்தின் அரச மரத்துக்கடியில் படையினரால் புதிதாகக் கட்டப்பட்டுள்ள புத்தர் கோவிலை உடனடியாக படையினர் அகற்றி ஆலயத்தின் புனிதத்தை பாதுகாக்க வேண்டும் எனப் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 2004 ஆம் ஆண்டு மகாசிவராத்திரியன்று மட்டும் இங்கு பூசை செய்ய அனுமதித்த படையினர் அதன் பின்பு இப்பகுதிக்கு பொது மக்கள் வருவதை தடுத்து வைததுள்ளதுடன் வழிபாடுகள் செய்ய அனுமதி மறுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

இப்பிரதேசத்தில் உயர்பாது காப்பு வலயத்தினுள் மட்டும் உள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களில் எவ்வித வழிபாடுகளையும் மேற்கொள்ள படையினர் அனுமதிப்பதில்லை.

குறிப்பிட்ட இந்து ஆலயத் தில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் கோயிலை உடனடியாகப் படையினர் அகற்ற வேண்டுமெனவும் அவ்வாறு அகற்றத் தவறும் பட்சத்தில் படை யினருக்கு எதிராகப் போராட்டம் நடத்தப்படுமெனவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (28)

# யாழில் விபத்துக்களைக் கட்டுப்படுத்த அரச செயலகத்தில் முக்கிய மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம் பெறும் விபத்துக்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக ஆராயும் முக்கிய மாநாடு ஒன்று எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு யாழ். அரச செயலகத்தில் இடம் பெறும்.

யாழ்.அரச அதிபர் கே..கணேஷ் தலைமையில் இடம்பெறும். இம் மாநாட்டில் சிறிலங்காப் பொலிசார், வடபிராந்திய போக்குவரத்து சபையினர்,சிற்றூர்திச் சங்கத்தினர், தனியார் வாகன அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் எனப்பலரும் கலந்து கொள்வர்.

அத்துடன் இம்மாநாட்டில் விபத்துக்களைத் தவிர்ப்பது சம்பந்தமான ஆக்கபூர்வமான முன்மொழிவுகளை வழங்க விரும்புவோர் யாராக இருப்பினும் அது சம்பந்தமான அறிக்கைகளைத் தருமாறு பொது மக்களிடமும், போக்குவரத்து துறைசார் வல்லுநர்களிடமும் யாழ்.அரசஅதிபர் கோரியுள்ளார். (33)

# நாகர் கோவில் தெற்கு மக்கள் சுனாமி நிவாரணம் வழங்கக்கோரிக்கை

(தென்மராட்சி)

இரண்டாயிரமாம் ஆண்டு ஏற்பட்ட பாரிய யுத்த அனர்த்தத்தால் நாகர் கோவில் பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்கள் வடமராட்சியின் பல்வேறு பகுதிகளில் நிர்க்கதியான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வெளியேறி வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசித்து வரும் நாகர்கோவில் தெற்கு கிராம அலுவலர் பிரிவு மக்கள் தம்மை சுனாமி நிவாரணக் கொடுப்பனவுகளில் புறக்கணித்து விட்டதாகவும், இடம் பெயர்ந்து அல்லற்படும் தங்களுக்கும், தங்களுடைய சொந்தப் பிரதேசம் பாதிக்கப்பட்டதைக் கருத்தில் எடுத்து நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்குவதுடன், வடமராட்சி தெற்கு, மேற்கு, கிழக்குப் பிரிவுகளில் இடம் பெயர்ந்து வாழும் நாகர்கோவில் தெற்கு பகுதி மக்களுக்கு அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதைப் போல தமக்கும் இந்த நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (28)

# படையினரின் துணையுடன் தென்மராட்சியில் மாடுகள் கடத்தல்

(தென்மராட்சி)

மறவன்புலோ, தனங்கிளப்பு இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களின் கால் நடைகளை இரவு வேளைகளில் படையினர் துணையுடன் சிலர் பிடித்து இறைச்சிக்காக விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்கள் கால்நடைகளை இரவோடு இரவாக உழவு இயந்திரங்கள் மூலமும் நடையாகவும் யாழ்ப்பாணத்தின் இதர பகுதிகளுக்கு கடத்திச் சென்று விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கு உபகாரமாக இவர்களால் படையினருக்கு சாரயப் போத்தல்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# பிரதம தபாலக ஊழியர்கள் இரத்த தானம் வழங்கினர்

யாழ்.பிரதம தபாலகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் இரத்த தானத்தை யாழ்.போதனாவைத்தியசாலை இரத்த வங்கிப்பிரிவுக்கு வழங்கியுள்ளனர். பிரதம தபால் அதிபர் தலைமையில் தபாலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் 35 பேர் இரத்ததானம் செய்துள்ளனர். இரத்ததானம் வழங்கும் நிகழ்வு பிரதம தபாலகத்தில் நடைபெற்றது. யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் நலன் கருதி இந்த இரத்த தான முகாம் நடாத்தப்பட்டது. (28)

ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

பகுதி- 56

# கரையோர மக்களைப் பெருந்தொகையில் இழந்தது தமிழீழத்தின் பொருளாதாரத்திற்குப் பாரிய பின்னடைவு




**தமிழீழத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்குவகித்து வந்த மீன்பிடிக்கைத்தொழில் குமுறி அடித்தெழுந்த சுனாமி அலைகளின் மூர்க்கத்துக்குள் சிக்கி முற்றாக அழிந்து போய்விட்டது. கரையோர மக்களை பெருந்தொகையில் இழந்தது எமக்குப் பெரும்பின்னடைவைத் தந்திருக்கிறது. கடற்றொழில் சமூகத்தின் வாழ்வை உலுப்பிவிட்டிருக்கிறது. இந்தப் பேரிழப்பு எங்களது தாயகத்தின் வளர்ச்சிக்கு பெரும்பின்னடைவு. முழுமையாகச் சிதைந்து பேரவலத்தைச் சந்தித்த முல்லைத்தீவின் மீட்பு நடவடிக்கைகள் விரைவாக நிறைவடைவதற்குத் தலைவர் வழங்கிய ஆலோசனைகள்தான் காரணமாக இருந்தது. எங்கள் தலைவர் எதையும் சொல்லில் காட்டுவதில்லை. அவர் செயலில் தான் காட்டுவார். விளம்பரத்தைவிரும்பாதவர். விடயம் நடக்க வேண்டும் என்பதில் உறுதியானவர் என சுனாமி கடற்பேரலையில் சிக்கிச் சிதைந்து போன முல்லை நகரில் மீட்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி மேற்கொண்ட தமிழீழக் கடற்படைச் சிறப்புத்தளபதி கேணல். சூசை அவர்கள் தனது அனுபவத்தைப் பகிர்ந்திருந்தார். அவர் பகிர்ந்தவை இன்றைய பகுதியிலும்.**

அ.லோகீசன்

***தலைமைச் செயலகப்*** பொறுப்பாளர் நீதன் உட்பட அவரது போராளிகளும் அங்கு வந்து தொலைத் தொடர்பு அன்ரனாக்களைக்கட்டி தொலைத் தொடர்புக் கருவிகளை (வோக்கி) எல்லாம் வழங்கி நடவடிக்கைகளைத் துரிதப் படுத்திக் கொண்டிருந்தனர்.

சண்டை நேரத்தில் கூட கிடைக்காத பொருட்கள், வசதிகள் எல்லாம் சுனாமி நேரத்தில் விரைவாகக் கிடைத்தன. அந்தளவுக்கு எங்களது தலைமை இந்த விடயத்தில் அதிக அக்கறையுடன் செயற்பட்டிருந்தது. அதனால் தான் இந்தப் பேரிழப்பு ஏற்பட்ட பகுதிகளின் சிதைவுகளையும், உடல்களையும் விரைவில் மீட்டெடுக்கவும் முடிந்தது.

முல்லைத்தீவு நகரை இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிப்பதற்காக ஓயாத அலைகள்-01 நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டபொழுது மக்களின் முழுமையான பங்களிப்புடன்தான் அதனை வென்றோம். மக்கள் எங்களுடன் தோளோடு தோள்நின்று உழைத்தார்கள்.

அதிலும் முல்லைத்தீவில் இருந்து இடம் பெயர்ந்து சென்று கரையோரப்பிரதேசங்களில் வாழ்ந்து வந்த மக்கள் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்த எறிகணைகளை மீட்டுத் தமது படகுகளில் ஏற்றிக்கொண்டு வந்து எங்களிடம் தர நாங்கள் அதை எதிரிக்கு எதிராக உடனடியாகப் பயன்படுத்தினோம்.

அந்தளவுக்கு எங்களுடன் ஒன்றித்துப் போய் போராட்டத்தை ஆழமாக நேசித்த மக்கள் பலரை இந்த மோசமான கடலலைக்குள் பறிகொடுத்துவிட்டோம்.

இராணுவப்பிடியில் இருந்து முல்லைத் தீவை மீட்டதன் பின்னர் அரசு பெரிதாக எந்த உதவிகளையும் செய்யவில்லை. வைத்திய சாலைக் கட்டடம் கூட கட்டித்தரவில்லை. சமாசம்தான் இருபத்தொரு இலட்சம் ரூபா செலவில் ஒரு விடுதியைக்கட்டியது. அம்பியூலன்ஸ் வண்டிகள் எதையும் தரவில்லை. இந்த நிலையில் எங்களது நிதித்துறைதான் அம்பியூலன்ஸ்வண்டியை வழங்கியது.

மக்களுக்கான மீள்குடியேற்றத்துக்காக வெறும் பதினைந்து ஆயிரம் ரூபாவை மாத்திரம் வழங்கியிருந்தது. இந்தப் பணத்தை வைத்து என்ன செய்ய முடியும்? இருந்தாலும் அவர்கள் தங்களது நிலத்தில் போய்க் குடியேற வேண்டும் என்ற துடிப்பில் குடியேறிவிட்டார்கள்.

அடுத்த கட்டமாகத் தொழில் செய்ய வேண்டும். எதிரியின் அச்சுறுத்தல் ஒருபுறம். மறுபுறம் தொழில் உபகரணங்கள் இல்லாத நிலை. இந்த நிலையில் அரச உதவியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.



நிதித்துறையினரின் வாணிபப் பகுதி கடன் திட்டத்தின் மூலம் தொழில் செய்வதற்கான ஒழுங்கமைப்புக்களைச் செய்தது. அதேபோல வைப்பகம் நகரப் பகுதியில் வர்த்தகம் செய்வதற்குக் கடன் வழங்கியது. இப்படியான ஒழுங்குகளின் ஊடாக நகரம் சிறிது சிறிதாகக் கட்டி எழுப்பப்பட்டு வந்த நேரத்தில் சமாதானம் வந்தது. சமாதானத்தின் பின்னர் மக்கள் தமது உடலை வருத்தி உழைப்பை அதிகப்படுத்தி தமது வாழ்வை வளம்படுத்தி நகரின் செழிப்பை வலுப்படுத்திக் கொண்டு வந்தனர்.



இப்படி இருக்க யாருமே எதிர்பாராத வகையில் மிகத் தொலைவில் கடலின் மடியில் நிகழ்ந்த நிலவெடிப்பின் எதிர்விளைவு ஏற்கனவே பல சோகங்களைக் கண்டு துன்பத்துடன் வாழ்ந்து எங்கள் கரையோர மக்களின வாழ்வை வேரோடு சாய்த்து விட்டுப் போய்விட்டது.

எத்தனை நாளாய் வியர்வை சிந்தி உழைத்த உழைப்பும் உறவுகளின் உயிரும் கட்டி வளர்க்க நினைத்த நகரமும் எலலாமே அழிந்து விட்டன.

தமிழீழத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கு வகித்த மீன்பிடித் தொழில் சுனாமி அலைகளின் மூர்கத்துக்குள் சிக்கி முற்றாக அழிந்து போய் விட்டது.

இந்த மக்களின் இழப்பு பொருளாதார ரீதியாகப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி விட்டது. கடற்றொழில் சமூகத்தின் வாழ்வை உலுப்பிவிட்டது. இவர்களின் இழப்பு என்பது ஒட்டுமொத்தமாக எங்களின் தாயகத்தின் வளர்ச்சிக்கு பின்னடைவு.

எனவே இந்த மக்களின் வாழ்வைக் கட்டி எழுப்புகின்ற பணி பெரும் சவாலான ஒன்று. தெற்கிற்குக் கிட்டுகின்ற அரசு உதவி கள் வடகிழக்குக்கும் கிட்டுமாக இருந்தால் மிகத் துரிதமாக மக்கள் மீண்டும் பழைய நிலையை அடைவார்கள். அவை கிடைக்கப் பெறாத நிலையில் இந்த மக்களின் தொலைந்து போன வாழ்வைக்கட்டியெழுப்ப அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டும்.

நாங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் அண்ணையின் அறிவுறுத்தல்களுக்கமைவாகத தான் செய்துமுடித்தோம். தாக்கத்தின் தன்மைகளை எங்களிடம் அண்ணை கேட்டறிந்து கொண்டிருந்தார். அவரின் அறிவுறுத்தல்களுக்கமைவாகச் செயற்பட்டதால்தான் நாங்கள் சுனாமிப் பாதிப்பு நடந்த அனைத்துப் பகுதிகளையும் விட வேகமாக மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது.

எங்களுடைய இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நிகழ்ந்த இந்தப் பெரும் அழிவை இவ்வளவு விரைவாக எப்படி எதிர்கொண்டார்கள் என்பது சர்வதேசநாடுகள் அனைத்துக்கும கூட ஆச்சரியமாக இருந்தது. இத்தனையும் எங்கள் தலைவரின் ஆளுமையும் அவரின் நேர்த்தியான செயற்பாட்டாலும் தான் அது முடிந்தது.

எங்கள் தலைவர் எதையும் சொல்லில் காட்டுவதில்லை. சிங்கள அரசியல்வாதிகள் போல் சந்தர்ப்பவாத அரசியலை நடத்துவதில்லை. எதையும் செயலில் செய்து காட்டுபவர் தான் எங்கள் தலைவர். விளம்பரத்தை விரும்பாதவர் விசயம் நடக்கவேண்டும் என்பதில் உறுதியானவர்.

அரச உதவிகள் எதுவும் கிடைக் காத நிலையில் தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பாதிக்கப்படாத மக்கள் மற்றும் தென்னிலங்கையில் இருக்கின்ற தமிழ் மக்கள் அதேபோல சிங்கள கிராமமக்கள் முஸ லிம் மக்கள் போன்றவர்கள் மக்களுக்கான உடனடி உதவிகளை செய்திருந்தனர்.

இந்தப் பேரிழப்பில் இருந்து தப்பிய மக்களை அவர்களின் வாழ்வை மீளவும் கட்டி எழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்குப் பெருமளவான உதவியை புலம்பெயர் தமிழ்மக்கள் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாகச் செய்திருந்தனர். அந்த மக்களின் பூரண ஒத்துழைப்புடன் தமிழர் புனர் வாழ்வுக்கழகம் பெரும் சுமையான பொறுப்பான வேலைத் திட்டங்களை பொறுப்பேற்றிருக்கின்றது.

ஊடகங்கள ஊடாக இந்த அழிவு நிலையை அறிந்து மேற்கொண்டு வரும் உதவிகளின் மூலம் எங்களை நாங்களே கட்டியெழுப்ப முடியும் என்கின்ற உணர்வை, பலத்தை எங்களுக்கு புலம்பெயர்மக்கள் ஊட்டியிருக்கிறார்கள். அரசின் உதவி கிடைக்காத நிலையிலும் பேரனர்த்தத்தில் சிக்கி உயிர்தப்பிய மக்களின் வாழ்வை மீண்டும் கட்டி வளர்க்கின்ற நடவடிக்கையில் புலம்பெயர் மக்கள் ஆற்றிய, ஆற்றுகின்ற பங்கு பெரியது எனத் தமிழீழக் கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை கூறி முடித்தார். நாளைய பகுதியுடன் இத் தொடர் முடிவுறும்.

# 11.04.2005-17.04.2005




11.

*. தென்னாபிரிக்காவின் உப சனாதிபதியை அரசியல் துறைப் பொறுப் பாளர் தலைமையிலான குழுவினர் சந்தித்து போர் நிறுத்தத்தைப் பேணவும், இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசவும் தயாரெனத் தெரிவிப்பு.



*. பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்கக்கோரி வவுனியாவில் மாபெரும் எழுச்சிப் பேரணி இடம்பெற்றது.



*. திருமலையில் ஈ.பி.டி.பியின் மாவட்ட அமைப்பாளர் இனந்தெரியா தோரால் சுட்டுக்கொலை.

*. மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் யாழ். விஜயம்

12.

* திருமலையில் சுனாமியால் பாதிக் கப்பட்ட சல்லிக்கிராம மக்கள் தமக்கு இதுவரை எதுவித நிவாரண உதவிகளையும் வழங்கவில்லையெனக் கூறி வீதி மறியலில் ஈடுபட்டனர்.

*. தென்னாபிரிக்காவின் போராட்ட வீரரும், நோபல் பரிசு பெற்றவருமான பேராயர் டெஸ் மன் டுட்டுவை அரசியல் துறைப் பொறுப்பாளர் சந்தித்து தற்போதைய நிலைமை, சமாதானச் சூழல், பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினார்.



*. அரசாங்கத்தைக் கண்டித்து கிளிநொச்சியிலும், யாழ். தென்மராட்சியிலும், மாபெரும் கண்டனப் பேரணிகள் இடம்பெற்றது. முடிவில் சர்வதேச நாடுகளுக்கும், சனாதி பதிக்கும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.




*. துணுக்காயில் மின்னல் தாக்கி ஒருவர் பலி.

*. இலுப்பைக் கடவையில் யானை தாக்கி ஒருவர் பலி.

13.

புலம்பெயர்ந்து அமெரிக்காவில் வாழ்கின்ற இராஜரட்ணம் குடும்பத்தினரால் கிளி.யில் அமைக்கப்பட்ட 35 வீடுகள் போர்ச் சூழல் காரணமாகவும், சமூக பொருளாதார ரீதியிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கையளிப்பு.




*. அம்பாறை - மகா ஓயாவில் பொலிஸ் வாகனம் மோதி சிறுவன் ஒருவன் பலி.

14

*. அயர்லாந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சரை அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான உயர் மட்டக் குழுவினர் சந்திப்பு.

*. சுன்னாகம்- தாவடிப்பகுதியில் இரண்டு சடலங்கள் மீட்பு.

*.பெற்றோர்களை இழந்த 50 சிறுவர் களுக்கு கிளி.சமுகப் பொருளாதார அபி விருத்தி வங்கியில் சேமிப்புக் கணக்கு ஆரம் பித்து வைப்பு.

15

*. பொலநறுவை மாவட்டம் சொறிவில் கிராமத்தில் தமிழ் தேசவிரோதக் குழுவினர் ஒன்பது பேர் சுட்டுக்கொலை.



*. திருக்கோவில் பிரதேச செயலாளர் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொலை.

*. கந்தபுரத்தில் பொது நூலகம் திறப்பு.



*. இந்தியாவிலிருந்து 35 இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பினர்.

16

*. ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் களைக் கொண்ட குழுவை சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசதிற்கு அனுப்பி வைத்து சேதங்களை மதிப்பீடு செய்ய முயற்சிக்க வேண்டுமென ஐரோப் பிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேண்டுகோள்.

*. யாழ்ப்பாணம்- இருபாலையில் ஏற்பட்ட வீதி விபத்தில் ஒருவர் பலி.

*. சுனாமி புனர்நிர்மாண வேலைகள் அரசு-புலிகள் ஒன்றிணைந்து பணியாற்றத் தூண்டியுள்ளதென ஐரோப்பிய பாராளு மன்ற உறுப்பினர் றியான் அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழு வினரைச் சந்தித்த பின்னர் தெரிவிப்பு.

*. நுணாவில் முகாமில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இராணுவ மேஜர் உட்பட மூவர் பலி.

17

*. நோர்வேயின் விசேட சமாதானத் தூது வர் எரிக்சூல்ஹெய்ம் புத்தளத்திற்கு விஜயம் செய்தார்.



# ஆழிப்பேரலை சட்ட மூலத்திற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் பாராளு மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ள ஆழிப்பேரலை விசேட ஒழுங்கு முறைகள் சட்ட மூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் இரண்டு மனுக் கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இரண்டு அரசசார்பற்ற அமைப்புக்கள் இம் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. ஆழிப் பேரலைப் பாதிப்புகள் தொடர்பாக நிவாரணம் வழங்குவதை நோக் காகக்கொண்டு நிதியமைச்சரால் கடந்த ஐந்தாம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட சட்டமூலத்தில் சில சரத்துக் கள் அரசியலமைப்புக்கு முரணாக இருப்பதாகவும் அம்மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இச்சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு அதிக பெரும்பான்மை யும், சர்வசன வாக்கெடுப்பு ஒன் றின் மூலமான அங்கீகாரமும் தேவை என்று உத்தரவைப் பிறப் பிக்குமாறு மனுதாரர்கள் கோரி யிருக்கின்றனர். (32)

# அவசர காலச்சட்டம் நீக்கப்படமாட்டாது

## -சிறிலங்கா அரசு அறிவிப்பு-

(கொழும்பு)

அவசர காலச்சட்டம் ஒரு போதும் நீக்கப்படமாட்டாதென சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. கடந்த டிசம்பரில் நாட்டின் தெற்கு மற்றும் வட-கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட சுனாமியை அடுத்து அரசாங்கம் நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது.

எனினும் கடந்த வாரம் இச்சட்டம் தேவையற்றது. இது நன்மை யளிப்பதாயினும், அதிக பாதிப்பையே மக்களுக்கு ஏற்படுத்துவதாக ஜே.வி.பி தெரிவித்திருந்தது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வில் அரசிற்கு அக்கறையில்லை

## -சாடுகிறார் பிரதமர் ராஜபக்ஷ

(கொழும்பு)

சுனாமியால் பாதிப்படைந்த மக்களுக்கு குடியிருப்புக்களை விரைவாக அமைத்துக் கொடுக்க உதவுமாறு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள தனியார் பொது அரசசார்பற்ற அமைப்புக் களிடம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவர்களுக்கான புனரமைப்புப் பணிகளில் அரசாங்கம் அதிகம் அக்கறை செலுத்தவில்லை என்றும் தாமதம் காட்டுவதாகவும் தெரிவிக்கும் அவர் பணியினை பொறுப்பேற்றவர்கள் மேலும் தாமதிக்காமல் விரைவில் அதனை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். சண்டே லீடருக்கு அவர் அளித்துள்ள செவ்வியில் மேலும் தெரிவிக்கும் போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிவப்புப் பட்டிக்காரர்கள் இந்த விடயத்தில் முட்டுக் கட்டையாக இருப்பதாகவும் அது அரசின் தவறான போக்கை காட்டுவதாகவும் கூறியுள்ளார்.

ஏற்கனவே வடக்கு கிழக்குப் பகுதிகளில் மக்கள் யுத்தத்தால் இன்னலுற்றிருப்பதாகவும் இவர்களை மீள்குடியமர்த்த விரைவாக நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென்றும் அரசினதோ, அமைப்புக்களினதோ பலவீனம் மக்களைத் தொடர்ந்து முகாம்களில் வாழவிடக்கூடாது என்றும் தம்மைப் போன்றோர் சுகபோகமாக வாழும் போது மக்கள் மிகுந்த துன்பத்துடன் வாழ்வதாகவும் கூறியுள்ளார்.

# தப்பிச் சென்ற கைதி துப்பாக்கிச் சூட்டிற்குப் பலி

(கொழும்பு)

மாத்தறை சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்று மறைந்திருந்த கைதி ஒருவர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபரைக் கைதுசெய்வதற்காக பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ருந்ததாகவும், சந்தேக நபரைக் கைது செய்ய முற்பட்ட போது அவர் பொலிஸ் அதிகாரிகள் மீது கைக்குண்டு வீச முற்பட்டதாகவும், அதனால் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ள நேரிட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் அம்பிலியப்பிட்டிய நீதிமன்றத்தில் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்பின் போது தப்பிச் சென்றதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# தமிழீழத்தின் ஒப்பந்தக்காரராக எரிக்சூல் ஹெய்ம் செயற்படுகிறார்

## -தேசிய பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நோர்வே அரசாங்கத்தின் பின்னால் செல்லும் நிலையை அரசாங்கம் நிறுத்திக்கொள்ள வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கேட்டுள்ளது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பொனறில் இந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நோர்வே நாட்டின் சமாதானத் தூதராகச் செயற்படும் எரிக்சூல்ஹெய்ம் தனது பணிகளில் இருந்து விலகிச்சென்றுகொண்டிருக்கிறார்.

அவர் சமாதான முனைப்புக்காக இங்கு வந்த போதும், தற்சமயம் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன் தொடர்பில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இது அவர் வரையறையை தாண்டிச் சென்று கொண்டிருப்பதையே உணர்த்துகிறது.

தமிழீழம் ஒன்று அமைக்கப்படுவதற்கான ஒப்பந்தக்காரராகவே எரிக்சூல்ஹெய்ம் செயற்பட்டுக் கொணடிருப்பது இதன் மூலம் வெளிப்படுவதாகத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

*–ஆழிப்பேரலை நிவாரணத்திற்கு–*

# ஒரு இலட்.அமெ.டொலர் மறைந்த பாப்பரசர் உதவி

சிறிலங்காவில் ஆழிப்பேரலை நிவாரணத்திற்காக ஆயிரக்கணக்கான டொலர்களை மறைந்த பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் தனது இறுதி நாட்களில் அனுப்பி வைத்ததாக வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலைகளை மீளமைக்க சிறிலங்காவிற்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களையும், நில நடுக்கத்தால் சிதைவடைந்த இந்தோனேஷியாவின் நியாஸ்தீவிற்கு 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களையும் பாப்பரசர் அனுப்பி வைத்ததாக வத்திக்கான் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தீவக இனச்சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதில் மறைந்த பாப்பரசர் ஆர்வம் கொண்டிருந்தார் என்றும் அச்செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# இலங்கையில் ஜிகாத், அல்ஹைய்தா இயங்குவதாக ஹெல உறுமய குற்றச்சாட்டு

இலங்கையில் ஜிகாத், அல் ஹைய்தா போன்ற ச்ர்வதேச பயங்கரவாத இயக்கங்கள் செயற்படுவதாக ஜாதிகஹெல உறுமயக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. அரசும், படைத்தரப்பும் இது குறித்து அவதானம் செலுத்தவில்லை என்றும் அந்தக் கட்சி கவலை தெரிவித்துள்ளது. பொத்துவில் புத்தர் சிலை விவகாரம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே ஹெல உறுமயக் கட்சியின் பிரதித் தலைவர் கலாநிதி, ஓமல்பே சோபித்த தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

படைத்தரப்புக்கு அதிகாரங்கள் போதியளவு வழங்கப்படாததன் காரணமாகவே தமிழ்ப் பிரிவினைவாதிகள் முன்நோக்கிச் செல்கின்றனர். படைத்தரப்புக்கு போதிய அதிகாரங்களையும், சுதந்திரத்தையும் வழங்கியிருந்தால் பிரிவினை வாதிகள் அழிந்து பல காலமாகியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொத்துவில் விவகாரம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்; பொத்துவில் புத்தர் சிலை விவகாரத்துடன் இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கத்திற்கு தொடர்புள்ளதாக விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உல்ல பிரதேசத்தில் பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழ்கின்றனர். இதன் போது புத்தர் சிலை அமைப்புப் பணிகளை அவர்களால் எவ்வாறு எதிர்க்கமுடியும். இந்த நாட்டில் எந்த இடத்திலும் புத்தர் சிலை அமைக்க பௌத்த மக்களுக்கு உரிமை இருக்கின்றது என்றார்.

# 50ரூபா கப்பம் பெற்றவருக்கு இரண்டு வருட கடூழியம்

(கொழும்பு)

கொழும்பு பேலியகொட என்ற இடத்தில் 50 ரூபாவைக் கப்பமாகப் பெற்ற சிறிலங்காப் பொலிசாருக்கு நீதிமன்றம் இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனையை வழங்கியுள்ளது.

குறிப்பிட்ட பொலிசார் கால் நடைகளை ஏற்றிச்சென்ற வாகனம் ஒன்றில் இருந்தவர்களிடமிருந்து 50 ரூபாவைக் கப்பமாகப் பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அவரைக் குற்றவாளியாகக் கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனையையும், 500 ரூபா அபராதத்தையும் விதித்துத் தீர்ப்பளித்தது.


*கிராமிய அபிவிருத்தி வங்கி*

# பணிநிலை வேண்டுகை

RURAL DEVELOPMENT BANK

*கிராமிய அபிவிருத்தி வங்கியினால் பின்வரும் பணி நிலைகளுக்கு தகைமையுள்ளோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**பணிநிலை (1)**
**வெளிக்கள அலுவலர்கள் (ஆண்கள்)**

வயது :- விண்ணப்ப முடிவுத் திகதியில் 20 அகவையில் இருந்து 25 அகவைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமை:- க.பொ.த. சாதாரணதரத்தில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், தமிழ் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத் திட்டம் :- $\frac{4650 - 6300 - 11050}{6X125+10X175+10X225}$ +2000=13050

**பணி நிலை (2)**
**அபிவிருத்தி அலுவலர் (ஆண்கள்)**

வயது :- விண்ணப்ப முடிவுத் திகதியில் 20 அகவையில் இருந்து 28 அகவைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை :- வெளிக்கள அலுவலர்களுக்கான கல்வித்தரத்துடன், க.பொ.த. உயர்தரத்தின் எதாவது துறையில் மூன்று பாடங்களுக்குக் குறையாது சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும். (வர்த்தகத்துறையில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

சம்பள அளவுத் திட்டம் :- $\frac{4750 - 6475 - 11875}{6X150+10X200+10X250}$ +2000=13875

**விசேட தகைமை :-** (இரு பணி நிலைகளுக்கும்) தமிழீழத்தின் எப்பகுதிகளிலும் பணியாற்றக் கூடியவராக இருப்பதுடன், வெளிக்கள கடமைகளைச் செய்யக்கூடிய உடல் தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அருகிலுள்ள கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையில் வேண்டுகைப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி பொதுமேலாளர், கிராமிய அபிவிருத்தி வங்கி, மத்திய செயலகம், கனகபுரம் பாடசாலை அருகாமை கனகபுரம் கிளிநொச்சி என்ற முகவரிக்கு 10.05-2005 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரிலோ அல்லது கடிதமூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பொது மேலாளர்,**
கிராமிய அபிவிருத்தி வங்கி,
மத்திய செயலகம்.

(சி-11647)



# கெயார் சர்வதேசம்-இலங்கை

care

**எதிர்காலத்திற்கான சமுதாய முன்னெடுத்தல் திட்டம் (LIET project) திட்ட உதவியாளர் உணவு உற்பத்தி (PAAT) ஆட்சேர்ப்பு வன்னி (1-வெற்றிடம்)**

**பதவி:-** திட்ட உதவியாளர் உணவு உற்பத்தி

**கல்வித் தகைமை :-** அடிப்படை விவசாய பட்டப்படிப்பு / விவசாய டிப்ளோமா.

**முன் அனுபவம் :-** உணவு உற்பத்தி தொடர்பான துறையில் 3 வருட அனுபவம்.

**சம்பளம் :-** தகைமைக்கு அமைவாக கெயாரின் வழமையான நன்மைகளையும் கொண்டிருக்கும்.

**நியமனம் :-** புதுப்பிக்கக் கூடிய ஒப்பந்த அடிப்படை.

**பொறுப்புக்களும் கடமைகளும்:-**

- உணவு உற்பத்தி நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித் திட்டத்தை அபிவிருத்தி செய்தல்.
- நடவடிக்கைகளை அமுல்படுத்தல்.
- கண்காணிப்பு, மீளளிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களைத் திரட்டுதல்.
- வலைப்பின்னல் அடிப்படையிலான தொடர்புகளை ஏற்படுத்துதல்.
- திட்டத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்தலும் அதனை விபரணப்படுத்தலும்.

**தகுதியுடையோர் சுய விபரக் கோவையை உறவினரல்லாத இரு மத்தியஸ்தர் பெயர்களுடன் Care Internaitonal, Old Post office, Kandy Road, Paranthan என்ற முகவரிக்கு 25.04.2005 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.**

**விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், பரந்தனில் உள்ள கெயார் அலுவலகங்களில் கையளிக்கலாம். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும்நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.**

*அணித் தலைவர்,*
*கெயார் சர்வதேசம்,*
*கிளிநொச்சி.*

(6062)

# இந்திய பாக். தலைவர்களினால் 17 அம்சக் கூட்டறிக்கை வெளியீடு

(புதுடில்லி)

**இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் ஆகியோர் 17அம்சக் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.**

மூன்று நாட்கள் பயணமாக இந்தியாவுக்கு வருகை தந்திருந்த பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் 17 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இருவரும் அதனை நடைமுறைப்படுத்துவதெனவும் கையொப்பமிட்டுள்ளனர். பாகிஸ்தான் அதிபரின் இறுதிப் பயண நாளான நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இந்தியா-பாகிஸ்தானிடையேயான வர்த்தகத் தொடர்புகளை விரிவுபடுத்துவது, எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடுகள் வழியாகவும், பாரவூர்திகள் செல்ல அனுமதிப்பது, இவ்வருட இறுதிக்குள் மும்பாய் கராய்ச்சி நகரங்களில் பரஸ்பரம் இந்திய பாகிஸ்தான் தூதரகங்களை அமைப்பது இணைந்த பொருளாதார ஆணைக் குழுவை மீண்டும் அமைப்பது காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தக்க வகையில் முன்னேற்றகரமான பேச்சுவார்த்தையை நடத்துவது உட்பட 17 அம்சங்கள் கொண்ட கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர். கூட்டறிக்கை வெளியிட்டதைத் தொடர் ந்து அதிபர் முஷாரப் தனது பயணத்தை முடித்துக் கொண்டு பாகிஸ்தானுக்குப் புறப்பட்டார்.



கூட்டறிக்கையை வெளியிட்ட இரு நாட்டுத் தலைவர்களும் கைகுலுக்கிக் கொள்கின்றனர்.



இந்தியா வந்திருந்த பாக். அதிபர் முஷாரப் பயணம் முடித்து தனது நாட்டுக்குத் திரும்பும்போது விமானத்தில் ஏறியநிலையில் இந்திய அதிகாரிகளிடம் இருந்து விடைபெறுகிறார்.

## 07ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு -1974-04-14

வீரச்சாவு-1998-04-20

**மேஜர் துஷ்யந்தன்/துவாரதன்**

**இரத்தினசிங்கம் லோகநாதன்(வவா)**

**5ஆம் வட்டாரம் குமுழமுனை**

**சம்பவம்:**

ஒலுமடு மாங்குளம் நோக்கி முன்னேறிய இராணுவத்துடனான நேரடிமோதலின போது.

இவருடன் சாவடைந்த மேஜர். ரங்கன ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

எம் பாசத்தின் குலவிளக்கே<br>
நீர் எம்மைவிட்டு ஏழு ஆண்டுகள் சென்றாலும்<br>
ஆறவில்லை உன் துயரம்<br>
நீ வருவாய் என வழிமேல் விழிவைத்துக் கார்த்திருந்தோம்<br>
வந்ததடா செய்தி நீ எம்மை விட்டுப் பிரிந்து விட்டாய் என்று<br>
உன்னை பத்து மாதம் சுமந்து பாசத்துடன் பெற்றெடுத்துச்<br>
சீராட்டி தலாட்டி செல்லமாக வளர்த்த அன்னையை<br>
பாதியிலே பரிதவிக்க விட்டுச் சென்றாயோ<br>
உனக்கு அன்பு காட்டிய தந்தையையும் உன்<br>
உடன் பிறப்புக்களையும் பரிதவிக்க விட்டு<br>
எங்கு சென்றாயோ மகனே.

**குறிப்பு:-**

**அன்னாரின் இல்லத்தில் 20.04.2005 அன்று மதிய போசன நிகழ்வு இடம்பெற இருப்பதால் உற்றார், உறவினர்,போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

தகவல்-<br>
குடும்பத்தினர்.

(5833)

## இடைத்தேர்தல் முடியும் வரை எந்தவொரு புதிய திட்டங்களும் தொடங்கக்கூடாது

### தலைமைத் தேர்தல் அதிகாரி உத்தரவு

(சென்னை)

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் மே-14 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இதற்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்றுமுன்தினம் தொடங்கியது. தேர்தல் பணியில் அரசியல் கட்சிகள் இப்போதே பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துள்ளன. இதற்கிடையே தேர்தல் நடத்தை விதிகளும் நடைமுறைக்கு வந்து விட்டன.

இந்த நிலையில் தமிழக அரசு தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ்குப்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது; தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அமைச்சர்களோ அரசோ எந்த வகையிலும் மானியத் தொகைகள் அல்லது வாக்குறுதிகளை அறிவிக்கக் கூடாது. எந்தவித திட்டங்களுக்கும் அரச அதிகாரிகள் தவிர மற்றவர்கள் அடிக்கல் நாட்டக் கூடாது. வீதிகள் அமைப்பது குடிநீர் வழங்கல் வசதி போன்ற எந்தவித திட்டங்களுக்கும் உறுதி அளிக்கக்கூடாது. ஆளும் கட்சிக்கு ஆதரவாக வாக்காளர்களை தூண்டச் செய்யும் வகையில் அரச பொது நிறுவனங்களில் எத்தகைய நியமனங்களையும் செய்யக் கூடாது என்றும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் உட்பட தேர்தல் நடைமுறை தொடர்பான அனைத்து அதிகாரிகள் அலுவலகர்கள் மாற்றங்களுக்கு முழுமையான தடை விதிக்கப்பட்டுள் ளது.டில்லி மேல் சபை உறுப்பினர்கள் உட்பட பாராளு மன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து தேர்தல் நடைமுறைகள் நடந்து கொண்டு இருக்கும்போது எந்தவித புதிய ஒதுக்கீடும் செய்யக் கூடாது.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் புதிதாக எந்தவித ஒதுக்கீடும் செய்யக் கூடாது. இத்தகைய ஏதாவது திட்டம் தற்போது நடந்து கொண்டு இருந்தால் தேர்தல் நடைமுறை முடியும் மட்டும் ஒதுக்கீடு செய்யக் கூடாது.

பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்படாத நிலையில் இருக்கும் திட்டங்கள் தேர்தல் நடை முறைகள் முடிந்த பின்பே தொடங்கலாம் ஏதாவது பணி ஏற்கனவே தொடங்கப்பட்டு இருந்தால் அது தொடரலாம்.இவ்வாறு தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா கூறியுள்ளார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. செல்லத்துரை இரத்தினம்**

அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் பெற்று சமூக சேவையாளரும், தன்னார்வத் தொண்டரும், செம்மலை உதயதாரகை சி.க.கூ சங்கத்தின் தலைவருமான உயர் திரு.செல்லத்துரை இரத்தினம் அவர்களை இந்நாளில் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வுறுகின்றோம்

முல்லை மாவட்ட சி.க.கூ.சங்கங்களும்,<br>
முல்லைமாவட்ட சி.க.கூ.ச.சமாச<br>
பணிப்பாளர் சபையும், பணியாளர்களும்.

(சி.11782)

## முக்கிய அறிவித்தல்

சந்திரமுகி திரைப்படம் வசந்தி சினிமாவில் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் சிறிய திரையரங்குகளில் அல்லது வீடியோ நிலையங்களில் காண்பிப்பதும், வைத்திருப்பதும் விநியோகம் செய்வதும் குற்றத்துக்குரியதாகும்.

வைத்திருப்பவர்களுக்கு வவுனியா மாவட்ட நிர்வாகத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**நிர்வாகம்**

(சி-11783)

# இந்திய கிரிக்கெட் அணியில் மாற்றம் தேவை என்கிறார் ராவிட்

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணியில் மாற்றம் தேவை என்று ராகுல் ராவிட் கூறியுள்ளார்.

டில்லியில் ஞாயிற்றுக்கிழமை நடந்த ஆறாவது மற்றும் கடைசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி பொறுப்பற்ற முறையில் ஆடி 159 ஓட்ட வித்தியாசத்தில் பாகிஸ்தானிடம் படுதோல்வி கண்டது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 4-2 என்ற கணக்கில் ஒருநாள் தொடரைக் கைப்பற்றியது. இதன் மூலம் பாகிஸ்தான் பழி தீர்த்துக் கொண்டது. கடந்த ஆண்டு இந்திய அணி பாகிஸ்தான் பயணத்தில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியிருந்தது.

டில்லி போட்டியில் இந்திய அணி தோற்ற விதம் ரசிகர்கள் நெஞ்சில் நீங்காத வடுவானது. நமது வீரர்கள் ஆட்டம் சரணடைவது போல இருந்ததால் ரசிகர்கள் கடும் கொந்தளிப்பில் உள்ளனர்.

இத் தோல்வி குறித்து இந்திய அணியின் தற்காலிகத் தலைவர் ராகுல் ராவிட் கூறியதாவது:- 2-0 என்ற கணக்கில் முன்னணியில் இருந்தும் தொடரை இழந்தது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. ஒரு நாள் ஆட்டத்தை பொறுத்தவரை முதல் 15 ஓவர்கள் முக்கியமானது. இதைப் பாகிஸ்தான் வீரர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஒரு நாள் போட்டியில் சமீபகாலமாக நமது வீரர்கள் சிறப்பாக ஆடுவதில்லை. இதனை வீரர்கள் சிந்தித்துப் பார்த்து தங்கள் ஆட்டத் தவறுகளை திருத்த வேண்டும். வீரர்கள் திறனில் முன்னேற்றம் தேவையானதாகும். கபில்தேவ், ரவி சாஸ்திரி போன்ற சலக துறை வீரர்கள் அணிக்குத் தேவை. புதிய வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பது பற்றித் தேர்வுக் குழுவினர் முடிவு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.



## நாளைய மூன்றாவது டெஸ்டில் தென்னாபிரிக்கா அணியில் பொலக்



மேற்கிந்தியத்தீவுகள்- தென்னாபிரிக்கா அணிகளுகிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி நாளை பார்படோஸ் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டியில் தென்னாபிரிக்க பந்து வீச்சாளர் ஷோன் பொலக் பங்கேற்பார் என நம்பப்படுகின்றது.

காயம் காரணமாக இவர் முன்னைய இரு போட்டிகளிலும் பங்கேற்கவில்லை. எனினும், தான் தற்போது குணமடைந்து போட்டிகளில் பங்கேற்கும் உடற்தகுதியைப் பெற்றிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவர் அணிக்குத் திரும்பினால் மண்டே ஸோண்டகி அணியில் இடம்பெறமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மாண்டோ கார்லோ மாஸ்டர் டெனிஸ்: ரேபல் நேடல் பட்டம் வென்றார்

மாண்டோ கார்லோ மாஸ்டர் டெனிஸ் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் ரேபல் நேடல் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

ஏ.டி.பி சுற்றுப் பயணப் போட்டிகளில் ஒன்றான மாண்டோ கார்லோ மாஸ்டர் டென்னிஸ் போட்டி மொராக்கோ நாட்டில் நடைபெற்றது. இதில் ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பட்டத்தைக் கைப்பற்ற ஸ்பெயின் வீரர் ரேபல் நேடலும், ஆர்ஜெண்டினா வீரர் கில்லர்மோ கொரியாவும் மோதினர்.

இந்தப் பரபரப்பான இறுதிப் போட்டியில் ரேபல் நேடல் 6-3,6-1,0-6,7-5 என்ற செட் கணக்கில் கொரியாவை வென்று பட்டம் பெற்றார். இப்போட்டியில் பட்டம் வென்றதன் மூலம் மாஸ்டர் பட்டத்தை வென்ற இரண்டாவது இளம் வயது வீரர் என்ற பெருமை ஸ்பெயின் வீரர் ரேபல் நேடலுக்குக் கிடைத்துள்ளது.

இதுதவிர,18வயதான இடது கைவீரரும், 11ஆம் வீரருமான நேடல் இந்த வருடம் கைப்பற்றும் மூன்றாவது பட்டம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றி நேடலுக்கு அடுத்த ஐந்து வார காலத்திற்குள் தொடங்கவுள்ள பிரெஞ்சு ஓபன் போட்டியில் பங்கேற்கும் தன்னம்பிக்கையை அளித்துள்ளது.

## அமெரிக்காவில் கிரிக்கெட் போட்டி விளையாட ஷேவாக், கும்ளே தேர்வு

அமெரிக்காவில் கிரிக்கெட்டை பிரபலப்படுத்தும் நோக்கில் அங்குள்ள கிரிக்கெட் சங்கம் நடாத்தும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட இந்தியா கிரிக்கெட் வீரர்களான கும்ளே, ஷேவாக் ஒப்பந்தமாகியுள்ளனர். மற்றும் சச்சின் டெண்டுல்கர், யுவராஜ்சிங் ஆகியோரையும் விளையாட செய்ய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அமெரிக்காவிலுள்ள கிரிக்கெட் சங்கம் நடத்தும் இப்போட்டி ஜுன் மாதம் 16, 18, 19ஆம் திகதிகளில் ஹவுஸ்டன் நகரில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் விளையாட இந்திய வீரர்கள் ஷேவாக், கும்ளே, பாகிஸ்தான் வீரர்கள் அப்ரிடி, முகமது சமி ஆகியோர் ஒப்பந்தமாகி இருக்கின்றார்கள். இவர்கள் உலக அணியில் இடம்பெற்று விளையாடவுள்ளனர். இவர்களை எதிர்த்து அமெரிக்க அணி விளையாடவுள்ளது. அமெரிக்காவில் கிரிக்கெட்டை பிரபலப்படுத்தும் நோக்கத்தில் இந்தப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# அவுஸ். டெஸ்ட் அணியிலிருந்து லீமன், இலியாட் நீக்கம்



2005ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு தற்பொழுது நீக்கப்பட்டுள்ள ஆறு பேரில் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் டரன் லீமனும், மத்யு இலியாட்டும் இடம்பெற்றுள்ளனர். ஏனையோர் மார்டின் போல், இயான் ஹார்வி, ஜிம்மி மகேர், பிராட் வில்லியம்ஸ் ஆகியோராவார்.

இவர்களின் இடத்துக்கு புதியவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களுள் சுழற்பந்து வீச்சாளர் டென்கலின், வேகப்பந்து வீச்சாளர் மைக்கல் லூயிஸ் ஆகியோரும் அடங்குவர். இவர்களைத் தெரிவு செய்ததில் தாம் பூரண திருப்தியடைவதாக தலைமைத் தேர்வாளர் ட்ரவர் ஹோன்ஸ் தெரிவித்துள்ளார்.

லீமன் காயம் காரணமாக ஆஷஸ் டெஸ்ட் தொடருக்கான அணியிலிருந்து அண்மையில் நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 27 டெஸ்ட் போட்டிகளில் ஆடிய லீமன் 1798 ஓட்டங்களைப் பெற்று 44.95 என்ற சராசரியைப் பெற்றுள்ளார்.

தேர்வாளர் மேலும் குறிப்பிடும்போது, எதிர்கால அணியைப் பற்றியும், இளம் வீரர்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்பதால் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டியிருப்பதாகக் கூறியுள்ளார்.

2004ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தத்தைத் தவறவிட்ட நியுசௌத் வேல்ஸ் வீரர் நதன் பிராக்கனுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

-ஒரு நாள் போட்டி-

# தரவரிசையில் சச்சின் பின்தள்ளப்பட்டார்



ஐ.சி.சி. கிரிக்கெட் தரவரிசைப் பட்டடியலிலிருந்து இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் பின்தள்ளப்பட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் அணியுடனான போட்டியின் முன்னர் பட்டியலில் பத்தாம் இடத்தைப் பிடித்திருந்த இவர் 13ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். பாகிஸ்தானுடனான போட்டித் தொடரில் ஒரு போட்டியில் 123 ஓட்டங்களைக் குவித்தபோதும்,ஏனைய போட்டிகளில் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தமையே இவர் பின்தள்ளப்பட காரணமாகியுள்ளது.

இப்போட்டித்தொடரில் 15 விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் 30ஆவது இடத்திலிருந்த பாகிஸ்தானிய பந்து வீச்சாளர் நவிட் உல் ஹசன் 12ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். ஏனைய பந்து வீச்சாளர்களில் எவ்வித மாற்றமும் கிடையாது.




## அரையிறுதிப் போட்டியில் விக்னேஸ்வராக் கல்லூரி வெற்றி

(நல்லூர்)

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான 20 ஓவர்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் அரையிறுதிப் போட்டி ஒன்றில் கரவெட்டி விக்னேஸ்வரா அணி வெற்றி பெற்றது.

இப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் தலா 59 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது அனைத்து இலக்குகளையும் இழந்தனர்.

யாழ். இந்து'க்கல்லூரி 19.1 பந்து பரிமாற்றங்களுக்கும், விக்னேஸ்வராக் கல்லூரி 17.4 பந்துப் பரிமாற்றங்களுக்கும் அனைத்து இலக்குகளையும் இழந்தன.

இறுதியில் குறைந்த பந்து பரிமாற்றங்களில் 59 ஓட்டங்களைப் பெற்ற விக்னேஸ்வராக் கல்லூரிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (41)

# ஓட்டங்கள் சம நிலையில் சென்ரலைட்ஸ்சிற்கு வெற்றி

(நல்லூர்)

மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம், அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தி வரும் 30 பந்து பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கும், சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம் பெற்ற போட்டியில் இரு அணிகளும் 175 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 30 பந்துப் பரிமாற்றங்களும் முடிவடைந்ததினால் இரு அணிகளும் சமநிலை யில் காணப்பட்டன.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினர் 175ஓட்டங்களை ஒன்பது இலக்குகளை இழந்தும், சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 175 ஓட்டங்களை ஏழு இலக்குகளை இழந்தும் பெற்றுக் கொண்டனர்.

இந்நிலையில் இப்போட்டியில் இலக்குகளின் இழப்பைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. இரு அணிகளும் 175 ஓட்டங்களைப் பெற்றதுடன், பந்து பரிமாற்றங்களையும் நிறைவு செய்திருந்தமையாலும் ஏழு இலக்குகளை இழந்திருந்த சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கு வெற்றி வழங்கப்பட்டது. (41)

## யாழ்.மாவட்டப் பாடசாலை கரப்பந்தாட்டப் போட்டிகள்!

(நல்லூர்)

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர் வரும் 20,21,22 ஆம் திகதிகளில் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

15,17,19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே சுழற்சி முறையில் இடம்பெறவுள்ள இப் போட்டிகளில் ஒவ்வொரு வயதிலும் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் இடம்பெறவுள்ளன.

15,17 வயதுடைப் பிரிவுகளில் தலா பத்து அணிகளும், 19 வயதுப் பிரிவில் ஒன்பது அணிகளும் விளையாடவுள்ளன.

யாழ் மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் இரு இடங்களினையும் பெற்ற அணிகள் இப்போட்டிகளில் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றியீட்டும் அணிகள் மாகாண மட்டப் போட்டிகளில் விளையாடத் தகுதி பெறவுள்ளன. (41)



## சிந்தனைக்கு

கட்டி எழுப்பப்படவுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கு ஆயுதத்தை மட்டும் நம்பியிராமல்,அனைத்துத்துறைகளிலுமே வளரவேண்டும் என்பதில் நான் அக்கறையாக உள்ளேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 20-04-2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## இறுதி முடிவு?

ஊடகங்களில் பொதுக்கட்டமைப்புக் குறித்த தகவல்கள் மீண்டும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன. இதன் பிரகாரம் இவ்வாரத்தில் பொதுக்கட்டமைப்புக் குறித்த முக்கிய முடிவுகள் எடுக்கப் படலாம் என்ற அரசாங்க வட்டாரங்களில் இருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச சமாதானச் செலயகப் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவின் கருத்துக் கணிப்பின்படி, பொதுக்கட்டமைப்புக் குறித்து அரசாங்கத் தரப்பில் முடிவுகள் எடுக்கப்பட்டுவிட்டன. விடுமுறையில் லண்டன் சென்றிருக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பியதும் பொதுக்கட்டமைப்புக் குறித்த உடன்பாடு கைச்சாத்தாகும் என்பதாகவுள்ளது.

இதேவேளை, சமாதான ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வேத் தரப்பினர் பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் இன்னமும் இணக்கம் காணப்படாத விடயங்களைச் சீர்செய்யும் முயற்சியிலும், பொதுக்கட்டமைப்பு வரைவில் புதிய திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இவற்றின் ஓர் அங்கமாக நோர்வேயின் விசேட துதுவர் எரிக் சூல்ஹெய்ம் கொழும்பு வந்து அரசாங்கத் தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார். இவர் வெளிநாடுகளில் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டுள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர் நாடு திரும்பியதும் அவருடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் பொதுக்கட்டமைப்பு திட்டத்தில் புதிய திருத்தம் ஒன்றை தெரிவித்திருப்பதாகவும், விட்டுக்கொடுத்து நெகிழ்வுத் தன்மையுடன் பொதுக்கட்டமைப்பு உருவாவதற்கு விடுதலைப் புலிகள் உதவ வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தகவலொன்று தெரிவிக்கின்றது.

நோர்வேத் தரப்பின் இத்தகைய செயற்பாட்டைப் பார்க்கையில் அரசாங்கத் தரப்பு பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக தெரிவிக்கும் கருத்துக்கள் எத்தனை துாரம் நம்பகத் தன்மை கொண்டவை என்ற கேள்வி எழுகின்றது. ஏனெனில், பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாவதற்கான இறுதி வடிவம் பெறப்பட்டு விட்டதாயின் நோர்வேத் தரப்பின் இத்தகைய முயற்சிகள் ஏன்? என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான சரத்துக்கள் தொடர்பாக உறுதியான, முழுஅளவிலான தகவல்கள் வெளியிடப்படாத போதும், விடுதலைப்புலிகள் இயக்கம் நோர்வே சமர்ப்பித்திருந்த திட்ட வரைபை ஏற்றுக்கொள்வதாக ஏற்கனவே அறிவிப்புச் செய்துள்ளது. வெளிநாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின்போது அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் இதனைப் பகிரங்கப்படுத்தியுமிருந்தார்.

ஆகையினால், பொதுக்கட்டமைப்பு வரைவில் உடன்பாடின்மை, திருத்தம் என்பன குறித்த பேச்சுக்கள் யாவும் சிறிலங்கா அரச தரப்பினாலேயே உருவாக்கப்படுபவையாக இருத்தல் முடியும். ஏனெனில், புலிகளும், நோர்வேயும் பொதுக்கட்டமைப்பிற்கு இடையூறு விளைவிப்பதாகத் தகவல் ஏதும் இல்லை. இதனை உறுதிப் படுத்துமாப்போன்று,கொழும்புப்பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி தயா ஜயத்திலக்கா போன்றவர்களும் அரசாங்கம் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

ஆனால், பொதுக்கட்டமைப்புக் குறித்து ஆளும் கூட்டணிக்குள்ளும், அரசாங்கத்தை வெளியில் இருந்து ஆதரிக்கும் சக்திகளுடனும் இணக்கப்பாடுகள் ஏற்பட்டதாகவும் இல்லை. ஜே.வி.பி. முன்னைய நிலைப்பாட்டிலிருந்து சற்று மாறியுள்ளது போன்றதொரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்தியிருப்பினும், அதற்கு நிபந்தனைகள் விதிக்காமலும் இல்லை. இதேவேளை, ஜாதிக ஹெல உறுமய தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்றவை பொதுக்கட்டமைப்பை தீவிரமாக எதிர்த்தே வருகின்றன.

இந்நிலையில், பொதுக்கட்டமைப்புக் குறித்து அரசாங்கத் தரப்பில் இணக்கப்பாடானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பியதும் பொதுக் கட்டமைப்புத் தொடர்பான இணக்கப்பாடு ஏற்பட்டுவிடும் எனவும் கூறுவது எத்தனை துாரம் நம்பகத் தன்மைக்குரியதாக இருக்கும்?

ஆனால், அரசாங்கத் தரப்பு பொதுக்கட்டமைப்புக் குறித்து இத்தனை முனைப்புடன் பேசுவதற்கு மட்டும் வலுவான காரணியுண்டு. அதாவது, அடுத்த மாதத்தில் கண்டியில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்பாக பொதுக் கட்டமைப்புக் குறித்து முன்னேற்றகரமான முடிவொன்றை எட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஃ தேவை அரசாங்கத்திற்கு உண்டு. ஏனெனில், பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் பட்சத்தில் சிறிலங்காவிற்கு நிதி கிட்ட வாய்ப்புண்டு. இத்தேவையே அரசாங்கத்தை இன்று பொதுக்கட்டமைப்பு இறுதி வடிவத்தை எட்டும் நிலையை அடைந்துவிட்டது எனப் பேச வைத்துள்ளதுபோல் தெரிகின்றது. பொதுக்கட்டமைப்புத் தொடர்பான முடிவு எட்டப்படுதல் வரவேற்கத்தக்கதுதான். ஆனால், அரசாங்கம் இதனைச் சாதித்துவிட்டதா? அன்றி அதனைச் சாதிக்க முடியுமா? என்பதே கேள்வியாகும்.

# வவுனியாவில் ஏழு நலன்புரி நிலையங்களில் 2141 குடும்பங்கள் தொடர்ந்தும் அகதி வாழ்க்கை!

(செட்டிகுளம்)

வவுனியாவில் உள்ள ஏழு நலன்புரி நிலையங்களில் 2141 குடும்பங்களைச்சேர்ந்த 8453 பேர் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றார்கள். இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த இந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்ல முடியாத நிலையில் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர்.

பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில் 1069 குடும்பங்களைச் சேர்ந்த 4310 பேர் வாழ்ந்து வருகின்றனர். சிதம்பரபுரத்தில் 720 குடும்பங்களைச் சேர்ந்த 2815 பேரும் நெளுக்குளத்தில் 86 குடும்பங்களைச் சேர்ந்த 341 பேரும், ஜங்கராவூரில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 86 பேரும், அடப்பன்குளம் நலன்புரி நிலையத்தில் 159 குடும்பங்களைச் சேர்ந்த 594 பேரும், பாவற்குள நலன்புரி நிலையத்தில் 85 குடும்பங்களைச் சேர்ந்த 307 பேரும் வாழ்ந்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த 809 குடும்பங்களைச் சேர்ந்த 3402 பேர் தொடர்ந்தும் வவுனியாவில் உள்ள நலன்புரிநிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தில்*625 குடும்பங்களைச் சேர்ந்த 2472 பேரும் மன்னார் மாவட்டத்தில் 115 குடும்பங்களைச் சேர்ந்த 441 பேரும், யாழ்.மாவட்டத்தில் 234 குடும்பத்தினைச் சேர்ந்த 980 பேரும், வவுனியா மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் 220 குடும்பங்களைச் சேர்ந்த 725 பேரும், இராணுவக் கட்டுபாடற்ற பகுதியைச் சேர்ந்த 128 குடும்பங்களைச் சேர்ந்த 395 பேரும், பிற மாவட்டங்களைச் சேர்ந்த 10 குடும்பங்களைச் சேர்ந்த 38 பேரும் வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்து வவுனியாவில் ஏழுநலன்புரிநிலையங்களில் வாழ்ந்து வந்த மக்களில் கடந்த வருடம் 1142 குடும்பங்களைச் சேர்ந்த 5949 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டு இருப்பதாக வவுனியா அரச செயலகத்தின் புனர்வாழ்வுக் கிளையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (21)

# பொதுக்கட்டமைப்பு உருவாக்கும் விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

### - ரவூப் ஹக்கீம் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் இல்லை என அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கிம் தெரிவித்துள்ளார்.

இன்று இது தொடர்ப்பில் தாம் எரிக் சூல்ஹெய்மிடம் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.இதேவேளை சுனாமியினால் மன்னார் மாவட்டம் பாதிக்கப்படவில்லை என்ற நிலையில் அந்த மாவட்டமும் பொதுக்கட்டமைப்புக்குள் கொண்டு வரப்படவேண்டும் என்ற கருத்துக்கு உடன்பட முடியவில்லை.

என்றாலும் சமாதான இறுதித்தீர்வின் முதல்படியாக இந்தப் பொதுக் கட்டமைப்பு எடுத்துக்கொள்ளப்படும் என சனாதிபதி கூறியுள்ள நிலையில் அது உண்மையாயின் மன்னார் மாவட்டமும் பொதுக்கட்ட மைப்புக்குள் வருவதை தாம் எதிர்க்கவில்லை என ஹக்கீம் தெரிவித்தார். (32)

# சிறிலங்கா பொலிசாரின் தாக்குதலில் முச்சக்கரவண்டிச் சாரதி மரணம்!

### - மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம்

சிறிலங்காப் பொலிசாரின் தாக்குதல் காரணமாக முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மரண விசாரணையின்போது இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மகரகமப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட முச்சக்கரவண்டிச் சாரதியான குணசிங்க என்பவரே பொலிசாரின் காட்டுமிராண்டித் தனமான தாக்குதலினால் உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்தாம் திகதி இவரைக் கைது செய்த பொலிசார் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.அந்த வேளையில் உயிரிழந்த சாரதியின் மனைவி தனது கணவர் ஒரு இதய நோயாளி என்றும் அவரைத் தாக்க வேண்டாம் என்றும் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால் அவருடைய கூற்றினை செவிமடுக்காத பொலிசார் முச்சக்கர வண்டிச்சாரதியை கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

பிணையில் விடுதலை செய்யப்பட்ட இவர் களுபோவில்ல வைத்திய சாலையின் அவசரசிகிச்சைப் பிரிவில அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பொலிசாரின் இந்த நடவடிக்கையினைக்கண்டித்துள்ள மனித உரிமை அமைப்புக்கள் மீண்டும் பொலிஸ் பயங்கரவாதம் சிறிலங்காவில் ஆரமப்பித்திருப்பதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர். (32)

# எரிபொருட்களின் விலை இவ்வாரம் அதிகரிக்கலாம்?

டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணை ஆகியவற்றின் விலைகளில் இவ்வாரம் அதிகரிப்பு ஏற்படலாம் என மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உலக சந்தையில் மசகு எண்ணை ஒரு பரலின் விலை 62 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளதால் அதற்கேற்ப இலங்கையிலும் எரிபொருட்களின் விலைகளில் உயர்வை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதர்க மின்சக்த்தி எரிபொருட்துறை அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த் தெரி வித்துள்ளார். (32)

# பெரியகோமரசங்குளம் பகுதியில் கசிப்பு விற்பனை அதிகரிப்பு

வவுனியா பெரிய கோமரசங்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளது. இதனைத் பெரிய கோமரசங்குளம் பாடசாலை மாணவர்கள் பொலிசாரின் கவனத்திற்குக்கொண்டு வந்துள்ளன. இதனை அடுத்து நேற்றுமுன்தினம் சப் இன்ஸ்பெக்டர் சிறிஸ்கந்தராஜா தலைமையிலான பொலிஸ் குழுவினர் அந்தப் பகுதிக்கு சென்று கசிப்பு அருந்தி கொண்டு இருந்த இருவரை கைது செய்துள்ளனர் மற்றும் ஒருவர் தப்பித்து சென்று விட்டதாகப்பொலிசார் தெரிவிக்கின்றனர்.

எல்லை புறக்கிராமமான பெரியகோமரசங்களும் பகுதியில் அயல் கிராமமான அலகல்ல என்ற கிராமத்தில் இருந்து வரும் பெரும்பான்மையினத்தினைச் சேர்ந்தவர்களே வந்து கசிப்பு விற்பனை செய்வதாக கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர் வவுனியாவில் கசிப்பு விற்பனையால் மாணவர்கள் பெருமளவாக பாதிப்புக்குள்ளாகி வருகின்றார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(21)

# விவசாய அமைச்சின் அநாவசிய பிரச்சாரங்களே நெல் கொள்வனவுத் திட்ட தோல்விக்குக் காரணம்!

### - ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான அரச வேலைத்திட்டம் வெற்றியளிக்காமல் போனமைக்கான காரணம் அநாவசியப் பிரச்சாரங்களே என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட ஐக்கியதேசியக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நெல்லைக் கொள்வனவு செய்வது, உர மானியம், ஆயிரம் குளத்திட்டம் மற்றும் விவசாய அமைச்சின் கீழான வேலைத்திட்டம் தொடர்பாக அநாவசிய பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டதாக ஐக்கியதேசியக் கட்சி தெரிவித்துள்ளது. விளம்பரம் சுவரொட்டிகள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் மூலம் சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்களுக்கு அநாவசியப்பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கு விவசாய அமைச்சு அனைத்துத் தடவைகளிலும் முயற்சித்தது. அமைச்சின் மூலம் முறையான சேவைகள் இடம்பெறாமையினால் பிரசித்தம் பெறுவதற்காக விவசாய அமைச்சர் செயற்பட்டார் என ஐக்கியதேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். இதேவேளை நெல்லை விற்பனை செய்ய முடியாததால் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாக வெளியான செய்திகள் தொடர்பாகக்கருத்து வெளியிட்ட விவசாயத்துறைப் பிரதி அமைச்சர் பிமல் ரத்நாயக்க பொலநறுவை மற்றும் மதிரிகிரிய வாசிகள் இருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் எனினும் நெல்லை விற்பனை செய்வதற்கும், இந்தத் தற்கொலைகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனக் கூறினார். (32)

# கருணா குழுவிற்கான ஆதரவை விலக்க சிறிலங்கா புலனாய்வுத்துறை பரிசீலனை

## -தொடர் இழப்புக்களையடுத்து நடவடிக்கை

(கொழும்பு)

கருணா குழுவினருக்கு வழங்கி வரும் ஆதரவை விலக்கிக்கொள்வது குறித்து சிறிலங்காவின் புலனாய்வுத் துறைஆராய்ந்து வருவதாகத்தெரிவிக் கப்படுகின்றது.

மிகப் பெரும் தாக்குதல் தளபதி யாகத் தன்னை இனம் காட்டிய கருணா மற்றும் அவருடைய தள பதிகள் ஆகியோர் மீது தொடரும் தாக்குதல்கள் அவர்கள் மீதான நம் பிக்கையினை வெகுவாகக் குறைத் துள்ளதாகப் படைத்துறை ஆய்வாளர் கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் சொறிவில் பகுதியி லும் அதற்கு முன்னர் தீவுச் சேனை யிலும் மிகப் பாதுகாப்புடனும், இரக சியமாகவும் அமைக்கப்பட்ட கருணா குழுவின் முகாம்கள் தாக்குதலுக் குள்ளானமை படையினர் மத்தியில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.

ஏற்கனவே கொட்டாவ பகுதியில் கருணா குழுவினரின் முக்கியஸ்தர் கள் மீதான தாக்குதலின்போது கருணா குழுவின் ஒருங்கிணைப்பாள ரான நீல் தம்மிக்க என்ற புலனாய்வு அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டமை மற்றும் சொறிவில் பகுதியில் நான்கு புலனாய்வு அதிகாரிகள் கொல்லப்பட் டமை போன்றவற்றால் கருணா குழு மீது புலனாய்வுத்துறை நம்பிக்கை இழந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படு கின்றது.

கருணா குழுவின் நம்பகத்தன்மை மற்றும் அவர்களின் புலனாய்வு வலை யமைப்பின் பலவீனம் குறித்து தீவிர மாக ஆராய்ந்து வரும் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவு நேரடியாக அவர்களுக்கு உதவி வழங்குவது மற்றும் தொடர்பு அதிகாரிகளை நிய மிப்பது போன்ற செயற்பாடுகளை நிறுத்துவதற்கு ஆலோசித்து வருவ தாகவும் தெரியவருகின்றது.

கருணா குழுவினர் தற்போது இந் தியப் புலனாய்வு பிரிவினரால் இயக் கப்படுவதன் காரணமாக சிறிலங்கா புலனாய்வுத் துறையின் தலையீட்டை குறைக்குமாறு அல்லது முற்றாக நீக்குமாறு புலனாய்வுத் துறையின் உயர் மட்டத்திற்கு பணிப்புரை வழங் கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளி யாகியுள்ளன.

அமெரிக்காவினால் கையாளப் படும்சிறிலங்கா தேசிய புலனாய்வுப் பிரிவின் முக்கிய அதிகாரிகள் சிலர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ள தாகவும் இது அமெரிக்காவின் ஆலோ சனைப்படி பிறப்பிக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரியவருகின்றது.

எதிர்காலத்தில் கருணா குழுவினர் முற்று முழுதாக இந்தியப்புலானய்வுப் பிரிவான றோவினால் கையாளப்படு வார்கள் என்றும் அவர்களுக்குத் தேவையான சில ஒத்துழைப்புகளை மட்டும் வழங்குவதற்கு சிறிலங்கா புலனாய்வுத் துறையின் கிழக்கு மாகாண அதிகாரிகளுக்கு உத்தர விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (32)

### உள்ளூராட்சி..

இந்த நிலையில் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் 53 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் ஐந்தாவது முறையாகவும் ஒத்திவைக்கப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### பொதுக்...

ஆட்கொலைகள் இடம்பெறுவதனால் இதற்கான முழுப்பொறுப்பும் அரச தரப்பையேசாரும் எனவும் கிழக்கு மாகாணத்தில் அரச படைகளுடன் இயங்கும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவர்கள் வெளியேற்றப்படவேண்டும் எனவும் கேணல் பானு வலியுறுத்திக் கூறினார்.

அத்துடன் பொதுக்கட்டமைப்புத், தொடர்பாக கேணல் பானு தெரிவிக்கையில்; சுனாமியால் மிகப் பெரியளவில் பாதிப்படைந்த மட்டக்களப்பு அம்பாறைப் பிரதேசத் தில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்

எவ்வளவு விரைவாகப் பொதுக்கட்டமைப்பு உருவாக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அதனை உருவாக்கி சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

### நோர்வேயின்...

கருத்துரைத்த நோர்வேயின் சமாதானத் தூதர் எரிக் சூல்ஹெய்ம்

பொதுக்கட்டமைப்பு மற்றும் கிழக்கில் வன்முறைகள் தொடர்பில் இன்று (செவ்வாய்) இரண்டு தரப்புடனும் கலந்துரையாடிதாகத் தெரிவித்தார்

இதன்போது பொதுக்கட்டமைப்புக் குறித்தும்,அரசாங் கத்தின் நிலைப்பாடு குறித்தும்,பானுவிடம் விளக்கியதாக வும் அவர் குறிப்பிட்டார். இந்தப் பொதுக்கட்டமைப்பு உடனடியாக செயற்படுத்தப்படுவதன் மூலம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியும் என்பதில் பானு மகிழ்ச்சி வெளியிட்டதாக எரிக்சூல்ஹெய்ம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் படுகொலைகள் குறித்து பானுவுடன் கலந்துரையாடப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

சோலையகத்தில இடம்பெற்ற சந்திப்பை அடுத்து மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரை எரிக்சூல்ஹெய்ம் சந்தித்தார்

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் காத்தான்குடியில் அமைந்துள்ள பள்ளிவாசல் சம்மேளனங்களின் செயலகத் தில் மட்டக்களப்பு மாவட்ட பள்ளிவாசல்களின் சம்மேளன பிரதிநிதிகளை எரிக்சூல்ஹெய்ம் சந்தித்து உரை யாடினார்.

இதன்போது உரையாற்றிய எரிக்சூல்ஹெய்ம் பொதுக் கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்கள் புறந்தள்ளப்பட மாட்டார்கள். அவர்களும் குறிப்பிட்ட பொதுக்கட்டமைப்பில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள். தற்போதைக்கு பொதுக் கட்டமைப்பு அமைப்பு விடயத்தில் 99 வீதப்பணிகள் நிறைவடைந்துள்ளன.எனவே விரைவில் இந்தப் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படும் என எரிக் சூல் ஹெய்ம் குறிப்பிட்டார்.

கிழக்கில் கௌசல்யனின் கொலையை அடுத்து கொலைச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவை உடன டியாக நிறுத்திக்கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் சமாதானத்துக்கு இந்தக் கொலைச்சம்பவங்கள் பாதகமாக அமைந்துவிடலாம் என சூல்ஹெய்ம் எச்சரித்தார்.

## நாளை நடைபெறும்

எதிர்வரும் தொழிலாளர் தினத்தினை சிறப்பாக முன்னெடுப்பதற்கான கூட்டம் கடந்த 15 ஆம்திகதி அன்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விளக்குவதற்கான கூட்டம் இன்று நடைபெறவிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுமென யாழ்மாவட்ட மேதின ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர். (அ)

### தற்போதைய...

இதேவேளை ஆழிப்பேரலை தொடர்பான விஜயம் எனக் கூறப்பட்டாலும் கிறிஸ்டினா றொக்கா இலங்கையில் எதிர்வுகூறப்படும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்புக் குறித்தும் முன்னெடுப்புகளை மேற்கொள்வார் எனவும் அது குறித்தே நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்ம்மையும் சந்தித்துப் பேசுவார் எனவும் செய்திகள் கூறுகின்றன.

# மே தின ஏற்பாடுகளுக்காக பிரதேச மட்ட ஒன்றுகூடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் வரும் மே தினத்தை பெரும் ஏற்பாட்டில் முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் பி.ப 3.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் அரச திணைக்களத் தலைவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தலை வர்கள், முகாமையாளர்கள் கலந்து கொண்டு மேதினம் தொடர்பான தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டனர். முடிவில் மாவட்ட ரீதியான மேதின செயற்குழு தெரிவு செய்யப்பட்டு கலந்துரையாடல் நிறைவுபெற்றது. அத்துடன் மேதினம் தொடர்பான கலந்துரையாடல்கள் பின்வரும் ஒழுங்கிற் கமைய நடைபெறவுள்ளன.

அக்கராயன் பிரதேசம் நாளை பி.ப.3.00 மணி,பளைப் பிரதேசம் 22ஆம் திகதி, காலை 10.00 மணி, பரந்தன் பிரதேசம்,22 ஆம்திகதி பி.ப.3.00 மணி முழங்காவில் பிரதேசம் 23ஆம் திகதி காலை10.00 மணி, பூநகரிப்பிரதேசம் 23ஆம்திகதி பி.ப.3.00மணி கிளிநொச்சிப் பிரதேசம், 24ஆம்திகதி காலை 10.00மணி, விசுவமடுப் பிரதேசம் 24 ஆம் திகதி பி.ப.3.00 மணி, வட்டக் கச்சிப் பிரதேசம் 25ஆம் திகதி .பி.ப.3.00 மணி.

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கக்கோரி யாழ். இல் மீண்டும் பேரணி

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை கையளிக்கப்படல் வேண்டும் என்று வலியுறுத்தி யாழ். குடாநாட்டில் மீண்டும் எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது. யாழ். சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நாளை இப் பேரணி நடைபெறவுள்ளது. கட்டுடைச் சந்தியில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சென்றடையும். பேரணியின் முடிவில் மனுக்கள் கையளிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளன. இந்தப் பேரணியின் போது,தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஒப்படைக்க வேண்டும். இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் மக்கள் மீதும், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும் சிறில்ங்கா அரச கூலிப்படைகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக் கட்டமைப்பை உடனே ஏற்படுத்த வேண்டும். ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட உள்ளன என்று பேரணி ஏற்பாட்டாளர்கள் எமக்குத்தெரிவித்தனர்.

## -சுனாமி பேரனர்த்தத்தில்-
# ஆவணங்களை இழந்தவர்களிற்காக முல்லையில் அதே இடத்தில் சேவை

சுனாமி அனர்த்தத்தினால் தமது ஆவணங்களைத் தவறவிட்ட வர்களுக்காக, அதே இடத்தில் சேவையானது எதிர்வரும் மே மாதம் ஆறாம். ஏழாம், எட்டாம் திகதிகளில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆகிய இரு பிரதேச செயலாளர் பிரி வுகளிலும் அரசியலமைப்பு அலு வலர்கள் மற்றும் தேசிய ஒருமைப் பாட்டு அமைச்சினால் மேற்கொள்ளப் படவுள்ளது.

அதே இடத்தில் சேவையில் மீன்பிடி நீர்வள அமைச்சு, ஆட்பதி வுத் திணைக்களம், ஊழியர் சேமலாப நிதியம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், ஊழியர் நம்பிக்கை நிதிய திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், பரீட் சைத்திணைக்களம்,ஓய்வூதியத் திணைக்களம்,சட்டஉதவி ஆணைக் குழு, சட்ட உதவி நிறுவனம், சமூக சேவைத்திணைக்களம், காணித் திணைக்களம்,சிறுகைத் தொழில் திணைக்களம் ஆகிய திணைக் களங்களால் தமது சேவைகளை நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே மேற்கூறப்பட்ட திணைக் களங்களில் தமது சேவையைப் பெற விரும்புவோர் உரியவர்களுடன் தொடர்புகொண்டு, ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தெரி விக்கின்றார். (20)

# வெளிச்சம் வெளிவந்துவிட்டது

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் கலை, இலக்கிய சமூக இதழான வெளிச்சத்தின் தொண்ணூறாவது இதழ் வெளிவந்துவிட்டது.

இந்த இதழில் தமிழீழத்தேசியத்தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, புதுவை இரத்தினதுரை, த.ஜெயசீலன், கணனிக்கவி, பாட்டுக்குயில் சோ.சி கலைக்கதிர் ந.தகையன் யோ.கர்ணன்இளைய அப்துல்லாலாவன் ஆகியோரின் கவிதைகளும் செங்கையாழியான் ஞானரதன் ஆகியோரின் தொடர் கட்டுரைகளும் யதிந்திரா, பொன்.பூலோகசிங்கம் மலைமகள் அ.அன்ரனி ஆகியோரின் கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. அத்துடன் சாந்தன், ஆதிலட்சுமி சிவகுமார், உடுவில் அரவிந்தன் ஆகியோரின் சிறுகதைகளும், கவிஞர் சு.வில்வரெத்தினத்துடனான நேர்காணலும், நாட்டுப்பற்றாளர் வே.க.ஏரம்பு ஆசிரியர் நாட்டுப்பற்றாளர் விழிசிட்டி க.சிவராஜா அரங்கக் கலைஞன் நா.சுந்தரலிங்கம் ஆகியோருக்கான அஞ்சலிகளும் குறிப்புகள், புதிய வரவுகள் இன்னும் பலவும் இடம்பெற்றிருக்கின்றன. இத்துடன் சுனாமி அனர்த்தத்தின் புகைப்படச் சுவடுகளை நிறையத் தாங்கியும் இந்த இதழ் வெளிவந்துள்ளது.

### அன்னை...

இங்கு தமிழீழ போரியல் வரலாற்றைச் சித்தரிக்கும் திரைப்படங்களும் காண்பிக்கப்பட் டன.

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் நினைவு நிகழ்வுகள் கடற்புலிகளின் மகளிர் அரசியல் துறையைச் சேர்ந்த செல்வி. கவிக்குயில் தலைமையில் இடம்பெற்றது.

முழங்காவில் மாவீரர் மண்டபத்தில் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் இ. நவரத்தினம் தலைமையில் நினைவு நிகழ்வுகள் இடம்பெற் றன.

**முல்லைத்தீவில்**

புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் புதுக்குடியிருப்பு வணிகர் மன்றத் தலைவர் அருள்நாதன் தலைமையில் நினைவு நிகழ் வுகள் இடம்பெற்றன. இங்கு தமிழீழ மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அத்தோடு புதுக்குடியிருப்புப் பிரதேச மாதர் சங்கங் களுக்கான பொது அறிவுப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றியீட்டியோர் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழீழ தேசிய துணைப்படைச் செயலகத் தில் தமிழீழ தேசிய துணைப்படையைச் சேர்ந்த காவல்துறைப் பெண் உறுப்பினர் மங்க ளேஸ்வரி தலைமையிலும், வட்டுவாகல் விசார ணைப் பிரிவின் பொறுப்பாளர் சி. சிவநேசராசா தலைமையிலும் அன்னை பூபதி அவர்களின் இறுதி நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

விசுவமடுப் பிரதேசத்தில் விசுவமடு மாவீரர் மண்டபத்தில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் க. பத்மநாதன் தலைமையில் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

உடையார்கட்டில் மட்டு-அம்பாறை மாவட்ட மாவீரர் மண்டபத்தில் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

மல்லாவி மாவீரர் மண்டபத்தில் பிரதேச மாதர் சங்கத்தலைவி திருமதி க. விஜயலட்சுமி தலைமையிலும், வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அம்பாள்புரம் வலயப் பொறுப்பாளர் இ. செந்தூரன் தலைமையிலும் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

முல்லைத்தீவுக் காவல்பணிமனையில் காவல்துறை உறுப்பினர் சிவயோகரதி தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது. அத்தோடு, முல்லைப் பிரதேச வர்த்தக சங்கத் தலைவர் க.ம.யோசப் தலைமையிலும் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

மேலும், அளம்பில் பிரதேசத்தில் சுனாமி யால் பாதிக்கப்பட்ட மக்களின் தற்காலிகக் குடியிருப்புப் பொறுப்பாளர் தலைமையில் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

**யாழ்ப்பாணத்தில்**

யாழ். நல்லூரிலுள்ள கேணல் கிட்டுப் பூங்காவில் திருமதி வரதராசா திரேசா தலை மையிலும் தென்மராட்சியில் சாவகச்சேரி சங்கத்தானை முருகன் ஆலய முன்றலில் பிரத்தியேமாக அமைக்கப்பட்ட நிகழ்ச்சி மண்டபத்தில் கோயில் குடியிருப்பு மாதர் சங்கத் தலைவி திருமதி நளாயினி தலை மையிலும் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் சுனாமியால் பெற்றோரை இழந்த 28 குழந்தைகளுக்கு 2000 ரூபா வைப்பிலிடப்பட்ட வங்கிப் புத்தகங்களும், 15 குழந்தைகளுக்கு 2000 ரூபா வீதம் காசோலைகளும் வழங்கப் பட்டன. இவற்றை கைதடி தெற்கு சனசமூக நிலையமும், மீசாலை மேற்கு மாதர் அபிவிருத் திச் சங்கமும் வழங்கியது.

மேலும் வடமராட்சி பகுதிக்கான நினைவு நிகழ்வு அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் பகுதியிலும்,தீவகம் மற்றும் வலிகாமம் பகுதியிலும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை மன்னார் மாவட்டத்திலுள்ள சிறுவர் பூங்காவில் மன்னார் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலர் மாந்தையூரன் தலை மையில் அன்னை பூபதி அவர்களின் 17 ஆம் ஆண்டு இறுதி நாள் நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன. மேலும் மன்னார் நகரில் விடுதலைப் புலிகளின் அலுவலகத் திலும் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

வவுனியாவில் தாலிக் குளத்தில் மாவட்ட அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன. (சோ,ச,கு,சு,8,10,14, 19,20,24,27,28,41,46)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது